Registered as a Newspaper

பக்கங்கள் 12

விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 117

வெள்ளிக்கிழமை
22 மார்ச் 2024

பங்குனி 09 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055


முச்சந்தி முரளி



"இப்பிடிக் கொட்டிச் செலவழிச்சு வந்தும் ஒண்டும் உருப்படியா நடக்கேலையே"

# அடையாள அட்டை வழங்குமாறு முருகன் உயர்நீதிமன்றில் மனு!

சென்னை, மார்ச் 22
இந்தியாவின், முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலைவழக்கில் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட பின்னர் இன்னமும் சிறப்பு முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ள இலங்கையர்களில் ஒருவரான முருகன், தனக்கு அடையாள அட்டை வழங்க உத்தரவிடுமாறு உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளார்.
சென்னை உயர்நீதிமன்றத்தில் முருகன் தாக்கல் செய்துள்ள மனுவில், 'லண்டனில் உள்ள எனது மகளுடன் சென்று வசிப்பதற்கு விசா எடுக்க விண்ணப்பிக்கப்போகின்றேன். அதற்கு விண்ணப்பிக்க வேண்டுமெனில், ஒளிப்படத்துடன் கூடிய அடையாள அட்டை 11



# தப்பிப்பிழைத்தார் சபாநாயகர் யாப்பா

## பிரேரணை தோல்வி

**கொழும்பு, மார்ச் 22**

**சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவுக்கு எதிராக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியால் முன்வைக்கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை தோற்கடிக்கப்பட்டுள்ளது.** 11

# வவுனியா சிறைச்சாலை வதைமுகாமிலும் மோசம்

## சிறைசென்று மீண்டோர் தெரிவிப்பு

வவுனியா, மார்ச் 22
வவுனியா சிறைச்சாலை வதை முகாமைவிட மிகமிக மோசமானது. சிறைச்சாலைக்குள் அடைக்கப்படக் கூடியதைவிடவும் மூன்று மடங்கு அதிகளவான கைதிகள் அங்கு அடைக்கப்பட்டுள்ளனர் - என்று சிறைசென்று மீண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.
வவுனியா வெடுக்குநாறிமலையில் சிவ வழிபாட்டில் ஈடுபட்ட 8 பேர் 11

# வெடுக்குநாறிமலை பூசகர் மருத்துவமனையில்!

வவுனியா, மார்ச் 22
வவுனியா வெடுக்குநாறிமலையின் பிரதான பூசகரான தம்பிராசா மதிமுகராசா சுகவீனம் காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
வவுனியா வடக்கு, வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் கடந்த சிவராத்திரி தினத்தன்று ஆலயபூசகர் உள்ளிட்ட 8 பேர் கைதுசெய்யப்பட்டனர். அவர்கள் கடந்த 19 ஆம் திகதி நீதிமன்றத்தால் 10



# வவுனியாவில் விபத்து; இருவர் படுகாயம்

வவுனியா, மார்ச் 22
வவுனியா - வைரவப் புளியங்குளம் பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்து வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
வைரவப்புளியங்குளம் ரயில்நிலைய வீதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. ஓட்டோவும், மோட்டார்சைக்கிளும் மோதியே இந்த விபத்து சம்பவித்துள்ளது. ஓட்டோச் சாரதியும், மோட்டார் 11

# வெடுக்குநாறிமலையில் இந்துக்கோவில் இல்லை

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 22
வெடுக்குநாறிமலையில் கோயில்கள் ஏதும் கிடையாது. வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள பௌத்த மரபுரிமை இடங்களில் முறையற்ற வகையில் செயற்படுபவர்கள் தொடர்ந்து கைதுசெய்யப்படுவார்கள் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில் அவர் நேற்று மேலும் தெரிவித்ததாவது:- 10

# தவறான உறவால் சிசு: கொன்றெரித்த கொடூரம்

## போதகரும், பெண்ணும் கைது

முல்லைத்தீவு, மார்ச் 22
முல்லைத்தீவு - புதுக்குடியிருப்புப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், பச்சிளம் சிசுவை எரித்துக்கொன்ற குற்றச்சாட்டில் சிசுவின் தாயான பெண்ணும், போதகர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். 11

## உணவு தவிர்ப்புப் போராட்டம்

# போராட்டக்காரர்கள் உடலில் குறைவடைகின்றது நீர்ச்சத்து

ஒருவருக்குக் கடும் சுகவீனம்
மருத்துவர் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 22
இந்திய மீனவர்களின் அத்துமீறலைக் கண்டித்து, உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் நான்கு மீனவர்களின் உடலில் நீர்ச்சத்துக் குறைகின்றது என்றும், ஒருவரின் உடல்நிலை கடும் சுகவீனத்துக்கு உள்ளாகியுள்ளது என்றும் அவர்களைப் பரிசோதித்த மருத்துவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். 11

# ஜனாதிபதி ரணில் இன்று யாழ். வருகை

யாழ்ப்பாணம், மார்ச் 22
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்துக்கு இன்று வருகைதந்து பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொள்ளவுள்ளார்.
பலாலியில் படையினர் ஆக்கிரமித்துள்ள பகுதியில் 278 ஏக்கர் காணிகளை விவசாய நடவடிக்கைகளுக் 11



## ரணிலின் ஜனவரி மாத வடக்குப் பயணத்தில்

# 4 நாள்களுக்கு மட்டும் ரூபா 1,100,000 செலவு

## ஜனாதிபதி செயலகம் நிதி விடுவிக்காமையால் சிக்கல்

யாழ்ப்பாணம், மார்ச் 22
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த ஜனவரி மாதம் வடக்குக்கான பயணத்தை மேற்கொண்டபோது அவருக்காக 11 இலட்சத்து 24 ஆயிரத்து 808 ரூபா இங்குள்ள திணைக்களங்களால் செலவு செய்யப்பட்டுள்ளது.
இருப்பினும் இந்தத் தொகை இதுவரை ஜனாதிபதி செயலகத்தால் விடுவிக்கப்படவில்லை. இதனால் ஜனாதிபதி 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல்களுக்காக குரலெழுப்புங்கள்



## மஹிந்த தேசப்பிரிய வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 22

**பிற்போடப்பட்டுள்ள மற்றும் நடைபெற வேண்டிய அனைத்துத் தேர்தல்களும் 2025ஆம் ஆண்டுககுள் நடத்தப்பட வேண்டும். அதற்காக அனைவரும் குரல் எழுப்ப வேண்டும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.**

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் பிற்போடப்பட்டு ஒருவருடம் கடந்துள்ளது. அதுபற்றி எவரும் பேசுவதில்லை. சிறிய விடயத்தை செய்யாவிட்டால்அடுத்தடுத்தவிடயங்களையும் செய்ய முடியாது போகும்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் அதிகாரிகள் இதுபற்றித் தேடுவதில்லை. நீதிமன்றங்களின்தீர்ப்புவரும்வரை காத்திருக்கின்றனர். கருத்துக் கணிப்புகளை நடத்தும் ஒருசில அமைப்புகளைத் தவிர எவரும் இந்த விடயங்கள் பற்றி ஆய்வு செய்தில்லை.

தேர்தல் எப்போது நடைபெறும் என்பதல்ல எமது கேள்வி. உள்ளூராட்சிமன்றத் தேர்தல் எப்போது நடைபெறும் என்பதே எமது கேள்வி. நாடாளுமன்றத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலையும் நடத்த வேண்டும். சந்தர்ப்பம் இருந்தால் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொண்டு மாகாண சபைத் தேர்தலையும் நடத்த வேண்டும் - என்றார். (எ-இ)

# தென்னக்கோனை நீக்குக; ஹிருணிகா மனுத்தாக்கல்

கொழும்பு, மார்ச் 22

தேசபந்து தென்னக்கோன் பொலிஸ்மா அதிபர் அலுவலகத்தில் கடமையாற்றுவதையும் செயற்படுவதையும் தடுக்குமாறு கோரி உயர்நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்றை நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர தாக்கல் செய்துள்ளார்.

தென்னக்கோனின் நியமனம் முரணானது. காலி முகத்திடலில் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பில் கோட்டை நீதிவான் நீதிமன்றில் இடம்பெற்ற வழக்கில் தென்னக்கோன் சந்தேகநபராகப் பெயரிடப்பட்டுள்ளார்.

இந்த நியமனம் சட்டத்தின் ஆட்சியின் மீதான நேரடித் தாக்குதலுக்கு வழிவகுக்கும் என்றும் மனுவில் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ச-இ)

# உணவு கையாள்வோருக்கு மருத்துவப் பரிசோதனை

யாழ்ப்பாணம், மார்ச் 22

யாழ்.மாநகரப் பிரதேசத்திலுள்ள உணவு கையாளும் நிலையங்களில் பணியாற்றுவோருக்கான மருத்துவப் பரிசோதனைகள் ஒவ்வொரு வியாழக்கிழமை களிலும் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையில் இடம்பெற்று வருகின்றன.

சகல உணவு கையாளுவோரும் மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும். அத்துடன் உணவகங்களில் சுகாதார விதிகளைக் கடைப் பிடித்து பணியாற்ற வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச-17)



# பாதாளக் குழுவை ஒடுக்குவதற்கு பொலிஸ்குழு

கொழும்பு, மார்ச் 22

நாடளாவிய ரீதியில் நடைபெற்றுவரும் யுக்திய நடவடிக்கைகளுக்கு சமாந்தரமாக பாதாளஉலகச்செயற்பாடுகளை ஒடுக்குவதற்காக 20 விசேட பொலிஸ் குழுக்கள் களமிறக்கப்படவுள்ளனஎன்றுபொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு குழுவிலும் குற்றப்பிரிவு நிலையப் பொறுப்பதிகாரி ஒருவரும், 4 புலனாய்வு அதிகாரிகள், 2 விசேட அதிரடிப்படை அதிகாரிகள் உட்பட 9 அதிகாரிகள் அடங்குவர்.

கடந்த சில வாரங்களாக மேல் மற்றும் தென் மாகாணங்களில் தலைதூக்கியுள்ள பாதாள உலகக் குழுக்களின் வன்முறைகளைக் கட்டுப்படுத்தும் வகையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (ச-இ)

### 27 இலட்சம் குடும்பங்களுக்கு

# 2 மாதங்களுக்கு 10 கிலோ அரிசி

கொழும்பு, மார்ச் 22

குறைந்த வருமானம் பெறும் சுமார் 27 இலட்சம் குடும்பங்களுக்கு நிவாரணத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஜனாதிபதி முன்வைத்த திட்டத்துக்கே அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதன்படி, குடும்பமொன்றுக்கு மாதாந்தம் தலா 10 கிலோகிராம் நாட்டரிசி வீதம் 25 மாவட்டங்களிலுள்ள 27 இலட்சத்து 40 ஆயிரம் குடும்பங்களுக்கு இரண்டு மாதங்களுக்கு அரிசி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மாவட்டச் செயலகங்கள் ஊடாக பயநர்களின் விவரங்கள் பெறப்படவுள்ளன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. தேர்தலை மனதிற்கொண்டே இந்தத் திடீர் நிவாரணத்தை அரசாங்கம் வழங்கவுள்ளதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர். (அ,ச-6)

### 3 மாதங்களில்

# 5 இலட்சம் சுற்றுலாவிகள்

கொழும்பு, மார்ச் 22

இந்த வருடத்தில் இலங்கைக்கு வருகைத் தந்த சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை ஐந்து இலட்சத்தை தாண்டியுள்ளது.

அதன்படி, இதுவரை 5 லட்சத்து 37 ஆயிரத்து 887 ஆக பதிவாகியுள்ளது. என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது. (ச-இ)

# படுதோல்விக்கு அஞ்சியே பெரமுன குத்துக்கரணம்

கொழும்பு, மார்ச் 22

படுதோல்விக்கு அஞ்சியே முதலில் பொதுத்தேர்தலை நடத்த வேண்டும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி யோசனை முன்வைத்துள்ளது. எனினும், ஜனாதிபதித்தேர்தலையே ரணில் விக்கிரமசிங்க முதலில் நடத்துவார்.

இவ்வாறு பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

ஜனாதிபதித்தேர்தலில் படுதோல்வி அடைந்தால் நாடாளுமன்றத் தேர்தலிலும் ஆசனங்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைவடைந்து படுதோல்வி ஏற்படும் என்பது மொட்டுக் கட்சிக்குத் தெரியும்.

அரச அதிகாரம் இருக்கும்போது பொதுத்தேர்தலை நடத்தினால் அரச வளங்களையும், அரச ஊடகங்களையும் பயன்படுத்த முடியும் எனவும் அந்தக் கட்சி கருதலாம். எனவே தான் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பொதுத்தேர்தலை நடத்துமாறு அக்கட்சி கோரிக்கை விடுத்துள்ளது. ஜனாதிபதித்தேர்தலை நடத்துவதே தனக்கு ஏதோவொரு விதத்தில் சாதகமாக அமையும் என ஜனாதிபதி கருதுகிறார்.

மறுபுறத்தில் 113 உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்தால் நாடாளுமன்றத்தை ஜனாதிபதி கலைக்க வேண்டும். ஆனால் முன்கூட்டியே வீடு செல்ல மொட்டுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் தயாரில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-44)



தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் கடந்த வருட பசுமை அமைதி விருதுகள் விழா, யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா பிரதம விருந்தினராகவும், வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் தி.ஜோன் குயின்ரஸ், கிழக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் எம்.எஸ்.ஏ.கலீஸ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர். (ப-66,20)

# அம்பலப்பெருமாள் குளத்தின்கீழ் 365 ஏக்கரில் சிறுபோகச் செய்கை

முல்லைத்தீவு, மார்ச் 22

துணுக்காய் அம்பலப்பெருமாள் குளத்தின் கீழ் 365 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்வது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

துணுக்காய் உதவிப் பிரதேச செயலாளர் திருமதி நித்தியா தலைமையில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற சிறுபோக நெற்செய்கைக்கான கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது. (ப-350)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிக்குகளின் தலையீட்டாலேயே இனஒடுக்கல் தொடர்கிறது

*சர்வதேச நெருக்கடி கண்காணிப்புக் குழு சுட்டிக்காட்டு*

**கொழும்பு, மார்ச் 22**

**இலங்கையில் பௌத்த பிக்குகளின் அரசியல் தலையீட்டைத் தடுக்காத வரை, தமிழ்மக்களின் இருப்பு மற்றும் உரிமைகளை ஒடுக்கும் அராஜக சம்பவங்களே தொடரும் என்றும் சர்வதேச நெருக்கடி கண்காணிப்புக் குழு சுட்டிக்காட்டியுள்ளது.**

இதுதொடர்பில் அந்தக் குழுவின் இலங்கை ஆய்வாளர் அலன் கீனன் தெரிவிக்கையில்,

வவுனியா மாவட்டத்தின் வெடுக்குநாறிமலையிலுள்ள ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் கடந்த 8 ஆம் திகதி சிவராத்திரி தினத்தன்று பூஜை வழிபாடுகளில் ஈடுபடச்சென்ற பக்தர்களுக்குப் பொலிஸாரால் இடையூறு விளைவிக்கப்பட்டதுடன் ஆலயப்பூசகர் உட்பட எண்மர் வலுக்கட்டாயமாகக் கைதுசெய்யப்பட்டனர்.

இலங்கை அரசமைப்பில் மத வழிபாட்டுக்கான உரிமையும் சுதந்திரமும் வழங்கப்பட்டுள்ள நிலையில் சட்டத்தை மீறி காடைத்தனமாகச் செயற்பட்டமை பௌத்த பேரினவாத ஆக்கிரமிப்பின் வெளிப்பாடே. வடக்கு - கிழக்கு மாகாணங்களில் காணிகளை அபகரிப்பதையும் இன, மதப்பரவலை மாற்றியமைப்பதையும் இலக்காகக்கொண்டு திட்டமிட்ட நிகழ்ச்சிநிரல்கள் இடம்பெறுகின்றன.

இராணுவத்தினரின் ஒத்துழைப்புடன் இயங்கிவரும் பௌத்த பிக்குகளின் பேரரசியல் அபிலாஷைகளைத் தடுக்கும் வரையில் வெடுக்குநாறிமலை விவகாரத்தை போன்ற மோதல்கள் தொடர்ந்து அரங்கேறும் - என்றார். (ச-இ)

## 'அஸ்வெசும' பயனாளர்களை வலுவூட்டும் திட்டம் ஆரம்பம்!

கொழும்பு, மார்ச் 22

'அஸ்வெசும' பயனாளிகளை வலுவூட்டுவதற்கான விசேட வேலைத்திட்டம் சிறுதோட்ட அபிவிருத்தி அதிகாரசபையுடன் இணைந்து செயற்படுத்தப்படவுள்ளது என்று சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அனுப பெஸ்குவல் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

உற்பத்தி பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில் 'அஸ்வெசும' பயநர்களை ஊக்குவிக்க இந்த விசேட வலுவூட்டல் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## நாணயத்தைச் சேதமாக்கினால் கம்பி எண்ண வேண்டிவரும்

*மத்தியவங்கி எச்சரிக்கை*

இலங்கையின் நாணயத்தாளை வேண்டுமென்றே சேதப்படுத்தினால் அவர்களுக்கெதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்று மத்தியவங்கி எச்சரிக்கை விடுத்துள்ளது.

அலங்காரப் பொருள்கள் மற்றும் அன்பளிப்புப் பொருள்களை தயார்ப்படுத்துவதற்கு நாணயத் தாள்களைப் பயன்படுத்தும் போக்குக் காணப்படுவது மத்தியவங்கியின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. நாணயத்தாள்களைச் சேதப்படுத்துவது தண்டனைக்குரிய குற்றமாகும். இவ்வாறான செயற்பாட்டில் ஈடுபடுவோருக்கு மூன்று வருட சிறைத்தண்டனையுடன் பெருந்தொகை அபராதம் விதிக்கப்படும் என்றும் மத்தியவங்கி எச்சரித்துள்ளது. (ச-இ)

## எல்லைதாண்டிய மீன்பிடி தமிழக மீனவர்கள் கைது

*5 படகுகளும் பிடிப்பு*

இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் நெடுந்தீவு மற்றும் மன்னார் கடற்பரப்புகளில் வைத்து 32 தமிழக மீனவர்கள் ஐந்து விசைப்படகுடன் இலங்கைக் கடற்படையால் நேற்றுமுன்தினம் இரவு சிறைப்பிடிக்கப்பட்டுள்ளனர்.

நெடுந்தீவு கடற்பரப்பில் மீன் பிடித்துக் கொண்டிருந்த 3 விசைப் படகுகளையும் அதிலிருந்த 25 மீனவர்களையும் மன்னார் கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த 2 விசைப்படகையும் அதிலிருந்த 7 மீனவர்களையும் இலங்கைக் கடற்படையினர் கைதுசெய்துள்ளனர். (ஒ-100)

## சீனாவிலிருந்து வெங்காயம்

கொழும்பு, மார்ச் 22

சீனாவிடம் முன்பதிவு செய்யப்பட்ட பெரிய வெங்காயம் இன்னும் 5 நாள்களில் நாட்டுக்குக் கிடைக்கும் என வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். இதற்கு மேலதிகமாக பெரிய வெங்காயத்துக்குப் பதிலாக இளஞ்சிவப்பு வெங்காயத்தை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இளஞ்சிவப்பு வெங்காய இறக்குமதிக்கு அறவிடப்படும் 70 ரூபா வரி 10 ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளது. உள்நாட்டுச் சந்தையில் வெங்காயத்தின் விலை வரும் வாரங்களில் குறைவ்டையும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## உலகில் மகிழ்ச்சியான நாடு 129ஆவது இடத்தில் இலங்கை

கொழும்பு, மார்ச் 22

உலகின் மகிழ்ச்சியான நாடுகளின் பட்டியலில் இலங்கை 129 ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. ஐ.நா. ஆதரவுடன் ஆண்டுதோறும் உலகின் மகிழ்ச்சியான நாடுகள் பட்டியல் வெளியிடப்படுகிறது. ஒவ்வொரு நாட்டிலும் தனிநபர் வருவாய், சமூக ஆதரவு, சுகாதாரம் உட்படப் பல்வேறு அம்சங்களின் அடிப்படையில் இந்தப் பட்டியல் வெளியிடப்படுகிறது.

இந்தப் பட்டியலில் ஏழாவது முறையாக மீண்டும் 'பின்லாந்து' முதல் இடத்தைப் பிடித்துள்ளது. தொடர்ந்து டென்மார்க், ஐஸ்லாந்து, சுவீடன், இஸ்ரேல், நெதர்லாந்து, நோர்வே, லக்சம்பர்க், சுவிட்ஸர்லாந்து, அவுஸ்திரேலியா போன்ற நாடுகள் முதல் பத்து இடங்களைப் பிடித்துள்ளன.

இலங்கையில் ஏற்பட்ட அரசியல் முரண்பாடுகள், இயற்கைப் பேரழிவுகள் மற்றும் பொருளாதார நெருக்கடிகளின் விளைவாகவே இலங்கை தொடர்ந்தும் குறைந்த தரவரிசையில் உள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)




## புதினம் தெரியுமோ?

கிளிநொச்சியில ஒரு பள்ளிக்கூடத்தில கிட்டடியில பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கூட்டம் நடந்தது. அந்தக் கூட்டத் துக்கு அங்க படிக்கிற பிள்ளையளின்ர பெற்றார் கட்டாயம் வரவேணும் எண்டு முதலே அறிவிச்சிருந்தவை. ஆனால் எல்லாருக்கும் கூட்டம் நடக்கிற அண்டு போக வசதியிருக்காதுதானே. வேற ஏதும் முக்கியமான அலுவல் இருந்தால் கூட்டத்துக்குப் போகமாட்டினம். அப்பிடி அந்தப் பள்ளிக்கூடத்தில 13 பிள்ளையளின்ர பெற்றார், அபிவிருத்திச் சங்கக் கூட்டத்துக்குப் போகேலை. அடுத்தநாள் பள்ளிக்கூடத்துக்கு அந்த 13 பிள்ளையளும் போக, பிரின்சிப்பல் அவையைக் கூப்பிட்டு, பள்ளிக்கூட போனில இருந்து கோல் பண்ணி அவையின்ர பெற்றாரை வந்து சந்திச்சால்தான் வகுப்புக்க விடுவன் எண்டிருக்கிறார்.

தங்கட பிள்ளை படிக்கிற பள்ளிக்கூடக் கூட்டத்துக்கு பிள்ளையில அக்கறை இருக்கிற பெற்றார் கட்டாயம் போயிருக்கோணும். சரி, அப்பிடிப்போக ஏலாட்டி அடுத்தநாள் பிரின்சிப்பல் கோல் பண்ணின உடன போய், என்ன காரணத்துக்காக வரேலை எண்டதை விளங்கப்படுத்தினால் விசயம் முடிஞ்சுது. அப்பிடி 12 பிள்ளையளின்ர பெற்றார் பள்ளிக்கூட போனில இருந்து கோல் எடுத்தவுடனேயே, பள்ளிக்கூடத்துக்கு வந்து தாங்கள் கூட்டத்துக்கு வராததுக்கு மன்னிப்புக் கேட்டு, கொப்பியில சைனும் வைச்சிட்டு போட்டினம். அவையின்ர பிள்ளையளும் வகுப்புக்கு போட்டினம். ஒரேயொரு பிள்ளையின்ர பெற்றார் மட்டும் பள்ளிக்கூடக்காரர் போன் பண்ணியும் வரேலை. ஏனெண்டால் அந்தப் பிள்ளையின்ர அப்பா, வடக்கு மாகாணத்தில ஒரு முக்கியமான துறைக்குப் பொறுப்பா இருக்கிறார். அவருக்கு வேலை யாழ்ப்பாணத்திலை. அதால அவர் உடன போகேலாது. எண்டாலும் பிள்ளையின்ர அம்மாவாவது போயிருக்கலாமெல்லோ. இத்தனைக்கும் அவையின்ர வீடு பள்ளிக்கூடத்துக்கு முன்னுக்குத் தானாம். ஆனாலும் போகேலை. அப்பிடிப் போகாட்டிக் கூடப் பரவாயில்லை.

'நான் ஆரெண்டு தெரியுமோ? என்னெண்டு என்ர பிள்ளையை வகுப்புக்கவிடாமல் வைச்சிருப்பியள்? பொறுங்கோ, நான் சொல்லவேண்டிய இடத்தில சொல்லி என்ன செய்யிறனெண்டு பாருங்கோ' எண்டு வெருட்டியிருக்கிறார்.

வெருட்டினதோட நிக்காமல் கல்வித்திணைக்களத்துக்கும், வடக்குக்கு பொறுப்பா இருக்கிற மேலிடத்துக்கும் 'பள்ளிக்கூடத்தில பெரிய அநியாயம் நடக்குது. நிறையப் பிள்ளையளை வகுப்புக்கவிடாமல் வைச்சிருக்கினம். நியாயம் கேட்டால், ஆர் சொன்னாலும் அவையை விடமாட்டம் எண்டு பிரின்சிபல் சொல்லுறார். அப்பிடி மேலதிகாரிமார் இதில தலையிட்டால் பிரின்சிப்பல் வெளியில போடுவாராம்' எண்ட மாதிரி மேல்மட்டங்களுக்கு கொம்புசீவி விட்டிருக்கிறார் அந்தப் பிள்ளையின்ர அப்பா. அவர் பொறுப்பான பதவியில இருக்கிறதால, 'அவர் சொல்லுறதெல்லாம் சத்தியம்' எண்டு நம்பிக்கொண்டு, ரண்டு அதிகாரிமாரை அங்க போகச் சொல்லி வடக்கின்ர மேலிடத்தில இருந்து ஓர்டர் போயிருக்கு. அந்த அதிகாரிமார் போய்ப்பார்த்தால், அங்க எல்லாப் பிள்ளையளின்ர பெற்றாரும் வந்து சைன் பண்ணிட்டுப் போட்டினம் எண்டும், அவையின்ர பிள்ளையள் வகுப்புக்க போட்டினம் எண்டும் உண்மை வெளிச்சிருக்கு. தன்னட்ட அதிகாரம் இருக்கெண்டதுக்காக ஒரு பள்ளிக்கூடத்து கட்டுக்கோப்பை உடைக்க நினைக்கிறதும், தங்கட பிள்ளையின்ர நலனுக்காகக் கூட பள்ளிக்கூட மீட்டிங்குகளுக்கு போகாமல் திமிர் காட்டுறதும், பொய்க்குற்றச்சாட்டை சொல்லி பழிதீர்க்க நினைக்கிறதும் பொறுப்பான பதவியில இருக்கிறவைக்கு அழகில்லை கண்டியளோ.



-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளை ஈ தாக்கம்; வெயிலில் கூடும்

## தென்னைப் பயிர்ச்செய்கை சபை தகவல்

**யாழ்ப்பாணம், மார்ச் 22**

**அதிகரித்து வரும் வெப்பநிலையால் தென்னைப்பயிரில் வெள்ளை ஈயின் தாக்கம் அதிகரித்துள்ளது என தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் முகாமையாளர் வைகுந்தன் தெரிவித்தார்.**

வெள்ளை ஈயின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் முகாமையாளர் யாழ்ப்பாணத்தில் ஊடகங்களுக்கு மேலும் தெரிவித்ததாவது:

அதிகரித்து வரும் வெப்பநிலையால் தென்னைப் பயிரில் காணப்படும் ஓலைகளில் வெள்ளை ஈயின் தாக்கம் வடமாகாணத்தின் பல்வேறு பகுதிகளில் அதிகரித்துள்ளது. வேப்பெண்ணெய், சலவைத்தூள் உள்ளிட்டவற்றை மருந்து விசிறும் 20 லீற்றர் கொள்கலனின் கலந்து விசுறுவதன் மூலம் வெள்ளை ஈயின் தாக்கத்தைக் கட்டுப்படுத்த முடியும். மேலும், வெள்ளை ஈ தாக்கத்தால் பாதிக்கப்பட்டவர்கள் தென்னைப் பயிர்ச்செய்கைசபையைதொடர்புகொள்ள முடியும் - என்றார். (ஒ-20)



கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில் தவத்திரு சிவயோகசுவாமியின் 60 ஆவது குரு பூசை தினம் நேற்று கடைப்பிடிக்கப்பட்டது. (ச-17)

## ஆசிரியர் சமனற்ற வளப்பங்கீடு; தமிழ் மாணவர்களுக்குத் தாக்கம்

*அகில இலங்கை சைவ மகாசபை சுட்டிக்காட்டு*

யாழ்ப்பாணம், மார்ச் 22

வடக்கு - கிழக்கு, மலையகத் தமிழ்ப் பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்தில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் ஆசிரியரின் சமனற்ற வளப் பங்கீடு தொடர்பாக தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கவனம் செலுத்தவேண்டுமென அகில இலங்கை சைவமகாசபையின் பொதுச் செயலாளர் மருத்துவக் கலாநிதி ப.நந்தகுமார் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

சில பாடசாலைகள் அருகருகே 50 இற்கும் குறைவான மாணவர்களுடன் இயங்குகின்றன. ஒரு வகுப்பில் ஒரு சில பிள்ளைகள் எந்தவித உடல், உள விருத்திப் போட்டிகளின்றி இயங்குவதுடன் ஆசிரியர் வளமும் வீணடிக்கப்படும் நிலையில் இன்னொரு தொகுதிப் பாடசாலைகளில் குறித்த ஆரம்பக் கல்வி கணித, விஞ்ஞான ஆங்கிலப் பாடங்களுக்கு ஆசிரியர் இல்லாத நிலையில் நீண்டகாலமாக இருந்து வருகின்றனர்.

உயர்தர விஞ்ஞானக் கற்கைகளுக்குத் தகுதி பெறும் மாணவர்களைக் கணிசமாகக் குறைத்துள்ளதன் காரணமாக தமிழர் பிரதேச மருத்துவமனைகளில் துணைமருத்துவ ஆளணியினரில் கணிசமானோர் மொழி தெரியாத மாற்று இனத்தவரால் நிரப்பப்படும் அவலநிலை தொடர்கதையாக மாறி உள்ளது.

இந்த அவலநிலையை எதிர்வரும் ஆண்டுகளிலாவது நிவர்த்திக்க வேண்டுமெனில் மக்கள் பிரதிநிதிகள் உரிய தரப்புகளுக்கு அழுத்தங்களைப் பிரயோகித்து மாகாணத்துக்குள் எம்மால் செய்யக்கூடிய விடயங்களைச் செயற்படுத்த வேண்டுகின்றோம் - என்றுள்ளது. (ஒ-66)

## முதியோருக்கான கொடுப்பனவை கிராமத்தில் வழங்கக் கோரிக்கை

முல்லைத்தீவு, மார்ச் 22

புதுக்குடியிருப்பு, சுதந்திரபுரம் கிராமத்திலுள்ள முதியவர்களுக்கான கொடுப்பனவுகளைக் கிராமத்துக்கு வந்து வழங்குவதற்கான நடவடிக்கைகளைப் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலாளர் எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகத்திலிருந்து 8 கிலோமீற்றர் தூரத்தில் சுதந்திரபுரம் கிராமம் அமைந்துள்ளதால் சுதந்திரபுரம் கிராமத்திலுள்ள முதியவர்கள் நீண்ட தூரத்துக்குச் சென்றே தமது கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ளவேண்டியுள்ளது என்றும் முதியவர்கள் தெரிவித்தனர். (ப-13)





வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலயத்தின் சப்ததள இராஜ கோபுர கும்பாபிஷேகம் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் ஆயிரக்கணக்கான பக்த அடியார்கள் கலந்து கொண்டனர். (ப-159)

## திருட்டுடன் தொடர்புடைய சந்தேகத்தில் இருவர் கைது

யாழ்ப்பாணம் நகரப் பகுதி மற்றும் புறநகர்ப் பகுதிகளில் கைத்தொலைபேசிகளைத் திருடி வந்த இருவர் சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் ஒருவர் யாழ்ப்பபாணத்தைச் சேர்ந்தவர் எனவும் மற்றவர் மன்னாரைச் சேர்ந்தவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

திருட்டுச் சந்தேகநபர்கள் 12 க்கும் மேற்பட்ட தொலைபேசிகளைத் திருடியுள்ளனர். அவற்றில் ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ஒ-23)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். மனதில் தன்னம்பிக்கை அதிகரிப்பதுடன் உற்சாகமும் பெருக்கெடுக்கும். துணிச்சலுடன் செயற்படுவீர்கள் சிந்தனை மேலோங்கும். ஏற்பட்டிருந்த பிணக்குகள் நீங்கும். எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும்.

**இடபம்:** தாயின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் திடீர் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. பெரியவர்களின் ஆலோசனை அவசியம். மனவருத்தம் ஏற்படக் கூடும். அனுசரித்துச் செல்வது நல்லது.

**மிதுனம்:** புதிய முயற்சிகளை தொடங்குவது சாதகமாக முடியும். சுபநிகழ்ச்சி ஒன்று ஏற்பாடாகும். வீண் அலைச்சல் ஏற்படவும் உடல் அசதி உண்டாகவும் கூடும். சோர்வு நீங்கி உற்சாகம் பெறுவீர்கள். முன்னெச்சரிக்கை அவசியம்.

**கடகம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிர்பார்த்த காரியங்கள் அனுகூல மாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். வீட்டுப் பராமரிப்புப் பணிகளில் சுறுசுறுப்பாக ஈடுபடுவீர்கள். ஏற்பட்டிருந்த மனஸ்தாபம் நீங்கும்.

**சிம்மம்:** எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உங்கள் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு கிடைக்கும். அவர் மூலம் உங்களுக்குத் தேவையான உதவிகளும் கிடைக்கும். தேவையற்ற விவாதங்களைத் தவிர்க்கவும். பேசும்போது பதற்றம் தவிர்க்கவும்.

**கன்னி:** நல்ல செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. மற்றவர்களுடன் பேசும்போது பொறுமை அவசியம். தொடங்கும் காரியம் சாதகமாக முடியும். வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் அதிகரிக்கும்.

**துலாம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உள்ளது. செலவுகளால் கடன் வாங்க நேரிடும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். கடன்கள் விடயத்தில் கவனம் தேவை. சில சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**விருச்சிகம் :** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். ஆதாயம் கிடைக்கும். செலவுகளும் ஏற்படும். மறைமுக எதிர்ப்புகள் விலகும். மகிழ்ச்சி உண்டாகும். முயற்சி சாதகமாகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.

**தனுசு:** மனதில் இனம் தெரியாத சோர்வு ஏற்படக்கூடும். செலவுகள் ஏற்படும். பணம் கிடைப்பது தாமதமாகும். குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதில் சில சிரமங்கள் ஏற்படும். சஞ்சலம் ஏற்பட்டு நீங்கும்.

**மகரம்:** ஆதாயம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். சிலருக்கு திடீர்ப் பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். வெளியில் செல்லும்போது கவனமாக இருக்கவும்.

**கும்பம்:** புதியமுயற்சிகள்எதிலும்ஈடுபடவேண்டாம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சற்று அலைச்சல்ஏற்படும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. திடீர் செலவுகள் ஏற்படலாம்.

**மீனம்:** மன உறுதியுடன் செயற்படுவீர்கள். எதிர்பாராத பணலாபம் உண்டாகும். ஆனால், உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. மகிழ்ச்சி உண்டாகும். சிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். செலவுகள் அதிகரிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்




# இன்னும் நாடு படுகுழிக்குள் தான்!

'நாடு பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டுவிட்டது - மீண்டுகொண்டிருக்கின்றது' என்று ஆட்சியாளர்கள் பெருமை பீற்றிக்கொண்டாலும் -உண்மையான நிலைமை அவ்வாறு இல்லை. பொருளாதார நெருக்கடியால் நாட்டு மக்கள் எதிர்கொண்ட அழுத்தங்களும் - அந்த அழுத்தங்களால் ஏற்பட்ட நெருக்கடிகளும் இன்னமும் தொடர்ந்துகொண்டுதான் இருக்கின்றன. நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு கடந்தகாலங்களில் இலங்கை ஆட்சியாளர்களால் முன்னெடுக்கப்பட்ட முன்யோசனையற்ற -சுயலாபங்கள் சார்ந்த முடிவுகளும் -ஊழல்களுமே பிரதான காரணமாகச் சுட்டிக்காட்டப்படுகின்றன. நாட்டில் தொடர்ச்சியாகப் பதவியிலிருந்த அரசாங்கங்களும் அவற்றில் அங்கம்வகித்த அரசியல்வாதிகளில் மிகப்பலரும் மக்கள் பணத்தை முறையற்ற விதத்தில் தமது தனிப்பட்டநன்மைகளுக்காகப் பயன்படுத்திக் கொண்டனர் என்பது ஊரறிந்த இரகசியம். இலங்கைக்கு நெருக்கடியில் கைகொடுத்த சர்வதேச நாணயநிதியமும் இதனைச் சுட்டிக்காட்டியிருந்தது. ஊழல்களை ஒழிப்பதற்குக் காத்திரமான நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும் என்று வலியுறுத்தியிருந்தது.

நாடு பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டிருக்கின்றது என்று அரசாங்கம் கூறுகின்றபோதும் நாட்டு நிலைமை அதற்கு மாறாகத்தான் இருக்கின்றது. செலவுகளுக்கு ஏற்றவருமானம் இன்றிச் சொத்துகளையும் சேமிப்புகளையும் கரைத்தே மக்கள் தமது நாளாந்த வாழ்க்கையைக் கொண்டு நகர்த்திக் கொண்டிருக்கின்றனர். பொருளாதார நெருக்கடிகளால் சொத்துகளை அடகு வைப்போரின் -விற்போரின் எண்ணிக்கையும் அதிகரித்திருக்கின்றது என்கின்றன புள்ளிவிவரங்கள். இந்தப் புள்ளிவிவரங்களில் உள்ளடக்கப்படாத இன்னும் பல சங்கதிகள் இருக்கக்கூடும். இருப்பதை விற்று வயிற்றை நிரப்பும் பரிதாப நிலைமையிலேயே நாட்டு மக்கள் இப்போது இருக்கின்றனர்.

நாட்டின் எதிர்காலம் நிச்சயமற்றதன்மையில் இருக்கும் நிலையில் -ஆட்சியாளர்களும், அரசியல்வாதிகளும் தங்கள் சுயநலன்களுக்காக நாட்டை மீண்டும் படுகுழிக்குள் தள்ளும் கைங்கரியத்தை ஆரம்பித்திருக்கின்றனர். நாட்டுக்குத் தேவையான திட்டங்களை நடைமுறைப்படுத்தாமல்-அரசியல் நோக்கத்துடன் -வாக்குகளை இலக்குவைத்தே தற்போதும் ஆட்சியாளர்களும், அரசியல்வாதிகளும் இயங்குகின்றனர். ஊழல்களைத் தடுத்து- ஊழல்களில் ஈடுபட்டவர்களைத் தண்டிக்கவேண்டிய அரசாங்கம் அதைச்செய்யாது தவறுகளைச் செய்தவர்களைப் பாதுகாப்பதுடன் - அவர்களுக்குப் பதவிகளைக் கொடுத்து ஆதாயம் தேடவும் முற்படுகின்றது. நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலைமையால் ஜனாதிபதிக் கதிரையில் அமர்ந்துகொண்ட ரணில் விக்கிரமசிங்கவும் இந்தவழியிலேயே பயணிக்கின்றார். நாட்டின் மீட்பராகத்தன்னை அடையாளப் படுத்தி மக்களின் அபிமானத்தைப்பெற முயற்சிக்கும் ரணில் விக்கிரமசிங்க -செயற்பாட்டு ரீதியில் ஒரே குட்டையில் ஊறிய மட்டையாகவே இருக்கின்றார். பல்வேறு குற்றச்சாட்டுகளை எதிர்நோக்கியிருக்கும் ஒருவர் அண்மையில் 'கோப்' குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கும் சம்பவமும் ஆட்சியாளர்களின், ஆட்சியில் பங்கெடுத்திருப்பவர்களின் வழிதவறிய பயணத்தையே எடுத்துக்காட்டுகின்றது.

இலங்கை நெருக்கடியில் இருந்து விடுபட்டு, எவரிடமும் கையேந்தாத நாடாக மாறவேண்டுமானால் ஊழல்கள் ஒழிக்கப்படுவதும் மிக அவசியமான ஒன்று என்பது நிதர்சனம். ஆனால் இலங்கையில் இது நடைபெறுவதற்கான வாய்ப்புகள் அறவே இல்லை என்றே தோன்றுகின்றது. அதிகாரத்தில் உள்ளவர்கள் ஒட்டுமொத்தமாக மாற்றப்படும்வரையில் ஒருவரை ஒருவர் காப்பாற்றி மக்கள் பணத்தைக் கொள்ளையிடும் கூட்டம் இருந்துகொண்டே இருக்கும். நாட்டுமக்கள் அதை உணர்ந்து செயலாற்றும் வரையில் ஆட்சியாளர்களின் - அரசியல்வாதிகளின் பாவச்சுமையை மக்களே தலையில் சுமந்தாகவேண்டும்.



# பொருளாதார நெருக்கடியின் எதிரொலி வடக்கில் 2,313 காணிகள் ஈடுவைப்பு

**யாழ்ப்பாணம், மார்ச் 22**

**வடக்கு மாகாணத்தில் கடந்த வருடம் 2 ஆயிரத்து 313 காணிகள் ஈடு வைக்கப்பட்டுள்ளன. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தினூடாக பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வடக்கு அலுவலகத்திடம் தகவல் கோரப்பட்டது. அவர்கள் வழங்கியுள்ள பதிலிலேயே மேற்படி விடயம் தெரியவந்துள்ளது.**

வடக்கில் கடந்த ஆண்டு 46 ஆயிரத்து 49 காணிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. வங்கிகளில் ஈடு வைக்கப்பட்ட காணிகள் ஆயிரத்து 214 ஆகவும், தனியாரிடம் ஈடு வைக்கப்பட்ட காணிகள் ஆயிரத்து 99 ஆகவும் காணப்படுகின்றன. (ஒ-125)

## ரணில் வேண்டாம் ஐ.ம.ச. திட்டவட்டம்



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி ரணில்விக்கிரமசிங்கவுக்கு ஆதரவுவழங்காவிட்டால்கூட, அவருடன் இணைந்து செயற்படுவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தயாரில்லை என்று அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி என்பவற்றின் இணைவுக்கான சாத்தியம் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு அவர் இவ்வாறு கூறினார்.

"இதற்கான சாத்தியம் இல்லை. ஐ.தே.க.வுடனோ அல்லது ரணில் விக்கிரமசிங்கவுடனோ இணைந்து பயணிக்க வேண்டிய தேவைப்பாடு எமக்கு கிடையாது" என்று அவர் தெரிவித்தார். (எ-44)



## உதயமானது தயாசிறியின் கூட்டணி

கொழும்பு, மார்ச் 22

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தயாசிறி ஜயசேகர தலைமையில் 'மனித நேய மக்கள் கூட்டணி' உதயமாகியுள்ளது.

**அதன் ஆரம்ப நிகழ்வு நேற்றுமுன்தினம் புதன்கிழமை சர்வதேச தொடர்புகளுக்கும் ஆய்வுகளுக்குமான நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. அதில் கூட்டணியில் அங்கத்துவம் வகிக்கும் 20 கட்சிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. (ச-இ)**

## நடைமுறைக்கு வந்தன இரு புதிய சட்டங்கள்!

கொழும்பு, மார்ச் 22

**வற் மற்றும் சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரிச் சட்டங்களை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன சான்றுரைப்படுத்தியுள்ளார்.**

**நேற்று நாடாளுமன்ற நடவடிக்கைகளின் ஆரம்பத்தில் சபாநாயகர் அறிவிப்பின் கீழ் பிரதி சபாநாயகர் அஜித் இந்த விடயத்தைத் தெரிவித்தார்.**

**அதையடுத்து இந்த இரு சட்டங்களும் நேற்றுமுதல் நடைமுறைக்கு வந்துள்ளன. (ஏ-இ)**

## கோப் தலைமை எதிர்க்கட்சியிடம்

வலியுறுத்துகிறார் நளின்

கொழும்பு, மார்ச் 22

**கோப் குழுவின் தலைமைப்பதவி எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு வழங்கப்பட வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரும், கோப் குழு உறுப்பினருமான நளின் பண்டார வலியுறுத்தியுள்ளார்.**

**எதிரணிக்கு வழங்கமுடியாவிட்டால் ஆளுங்கட்சியில் உள்ள தகைமையுள்ள ஒருவர் அப்பதவிக்கு நியமிக்கப்படவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (எ-44)**

## நாளை

**23.03.2024**

**சனிக்கிழமை**

**பங்குனி–10**

சுபநேரம் : 03.16 – 04.46

ராகுகாலம் : 09.16 – 10.46

## நாளொரு நல்வார்த்தை

**வன்முறை என்பது மோசமானது ஆனால் அடிமைத்தனம் வன்முறையை காட்டிலும் மோசமானது.**

**– சுபாஷ் சந்திரபோஸ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துளி! விசும்பின் துளி வீழின் அல்லால்..


இன்று உலக நீர் தினம்

**'விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே பசும்புல் தலைகாண்பு அரிது'**

என்றார் வள்ளுவர்.

வானத்திலிருந்து மழைத்துளி வீழ்ந்தால் அல்லாமல், உலகத்தில் ஓரறிவுயிராகிய பசும்புல்லின் தலையையும் காணமுடியாது என்று அதற்கு உரையெழுதுகிறார் மு.வரதராசனார்.

எத்துணை பெரிய யதார்த்தமது. ஓரறிவுள்ள உயிர் நிலைக்கவேண்டுமென்றால் கூட, வானத்திலிருந்து வீழும் மழைத்துளி ஒவ்வொன்றும் மண்ணிலே சேர வேண்டும். அப்படியிருக்கையில் ஆறறிவுள்ள மனிதன் நிலைப்பதற்கு, ஒவ்வொரு துளி மழையும் மண்ணிலேசேர்வதை உறுதிசெய்ய வேண்டுமல்லவா? அதுபற்றி நாம் எப்போதாவது சிந்தித்திருக்கிறோமா?

சனத்தொகை மிகவேகமாக அதிகரித்தது. நகரத் திட்டமிடல் தளர்ந்து போனது. கொள்கை வகுப்பும் நடைமுறைப்படுத்தலும் வலுவிழந்து போயின. நிலத்து நீர் ஊறி நிலத்தடி நீர் மட்டம் உயர்வதற்கான சந்தர்ப்பம் தொலைந்து போனது. நவீன வாழ்வியலுடன் சேர்ந்து நீருக்கான தேவை அபரிமிதமாக அதிகரித்தது.


பொய்த்துப்போன மழையும் வற்றிப்போன ஏரிகளும் சேர்ந்துகொண்டன. நீர் வட்டம் நிலைகுலைந்தது. அறிந்தும் அறியாமலும் வினையை விதைத்ததால் இன்று பெங்களூரு வினையை அறுவடை செய்கிறது.

குழாய்க்கிணறுகளின் கட்டுப்பாடற்ற வருகையுடன் சேர்ந்து கடல் நீரும் மெல்லமெல்ல எம் நிலத்தடி நீரூற்றுகளை ஆக்கிரமிக்கத் தொடங்கியிருக்கின்றது. இதேநிலைமை தொடர்ந்தால், இன்னும் ஓரிரு தசாப்தங்களில் இன்றைய பெங்களூருவைவிட இன்னும் மோசமான நிலைமையை எமது யாழ்ப்பாணமும் எதிர்கொள்ள நேரிடும்.

இவற்றையெல்லாம் நாம் கண்டும் காணாமல் இருக்கிறோம். அறிந்தும் அறியாதது போல் நடிக்கிறோம். இயற்கையை மாற்ற விழைந்து நீர் வட்டத்தைக் குலைப்பதால் உருவாகும் பின் விளைவுகள் பற்றி நாம் சிந்தித்துச் செயற்பட வேண்டாமா?

இந்தியாவின் பூங்கா நகரம், ஏரிகளின் நகரம் என்றெல்லாம் விளிக்கப்பட்ட பெங்களூரு நகரத்துக்கு என்ன நடந்திருக்கிறது தெரியுமா? ஏழைகள், பணக்காரர்கள் என்ற பேதமின்றி குடிநீருக்காக மக்கள் வரிசையில் காத்திருக்கிறார்கள். காலைக்கடன்களைக் கழிப்பதற்காக பெரும் மீசந்தைக் கட்டடத் தொகுதிகளை நோக்கிப் படையெடுக்கிறார்கள். தம் வீடுகளிலே அவர்களால் உணவு சமைக்க முடியவில்லை. ஏனெனில் பாத்திரங்களைக் கழுவுவதற்குப் போதிய நீரில்லை. நகரின் 17 ஆயிரம் குழாய் கிணறுகளில் பாதிக்குமேல் வற்றிப்போய்விட்டன. திடீரென உருவாகிய நீர் தேவையைப் பூர்த்தி செய்ய நீர் வர்த்தகர்கள் மேலும் மேலும் நிலத்தைத் துளையிட்டு நீரையெடுக்க, நீர் மட்டம் அந்த மக்களை விட்டுத் தூரச்சென்று கொண்டிருக்கிறது. நீரின் விலையும் அதிகரித்துச் செல்ல, நகரை நாடித் தம் முதலீடுகளை மேற்கொண்டு, அந்த நகரே தஞ்சமெனக் குடிகொண்ட மக்கள் பரிதவித்துப் போயிருக்கிறார்கள். வாகனங்களை கழுவுதல் உட்பட அநாவசிய தேவைகளுக்கான நீர்ப்பாவனை தடை செய்யப்பட்டிருக்கிறது. இந்த நீர்ப்பற்றாக்குறை திடீரெனத் தோன்றியதல்ல. இயற்கையின் கட்டமைப்புகளிலே மனிதன் மேற்கொண்ட மாற்றங்கள் தந்த நீண்டகால விளைவுகளின் தோற்றப்பாடுகளில் ஒன்றையே இந்த மக்கள் இன்று அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். 1970களில் பெங்களூரு நகரத்தின் நிலப்பாவனை வரைபடத்திலே பசுமையான பகுதி ஒட்டுமொத்த நிலப்பரப்பின் 68 வீதமாகவிருந்தது. அக்காலத்தில் கட்டுமானங்கள் வெறும் 8 வீதமாகவே காணப்பட்டன.

உலக அரங்கிலே தகவல் தொழிநுட்பம் மேலோங்க, பெங்களூரு நகரம் இந்தியாவின் சிலிக்கன் பள்ளத்தாக்காகியது. நகரம் விஸ்வரூபமெடுத்தது. பசுமைமிகு நிலங்கள் பரப்பளவில் குறைந்து சென்றன. ஈரநிலங்கள் மறைந்து போயின. நான்கு தசாப்த காலத்தில் மொத்த நிலப்பரப்பில் 86 வீதத்தினை கட்டுமானம் கைப்பற்றியது. வானளாவிய குடியிருப்புகள் நிலத்தை நிறைத்தன.



காலங்காலமாக எம்மைக் காத்த நீர் வட்டம் இன்று மெதுமெதுவாக குழம்பத் தொடங்கியிருக்கின்றது. குழாய்க்கிணறுகளின் கட்டுப்பாடற்ற வருகையுடன் சேர்ந்து கடல் நீரும் மெல்ல மெல்ல எம் நிலத்தடி நீரை ஆக்கிரமிக்க தொடங்கியிருக்கிறது.

**மறைந்து செல்லும் தண்ணீரின் இருப்பு**

இன்று பெங்களூரு போல் நாளை எம் நிலமும் உருவாகலாம் என்று எப்போதாயினும் நாம் சிந்தித்துப் பார்த்திருப்போமா? வளமான மண்ணும் தாவரங்களும் வீதிக்கு வீதி கேணிகளும் காணிக்கு காணி துரவுகளுமாய் பச்சைப் பசேலென்ற தோட்டவெளிகளும் அவற்றைத் தழுவி வந்து மோதும் தென்றலுமாய் எங்கள் யாழ். மண்ணும் ஒரு காலத்தில் செழித்திருந்தது. யுத்தம் ஓய்ந்தது. மீள் குடியேற்றம் நடந்தது. ஒரு தசாப்தம் கழிந்து மின்சாரம் யாழ். மண்ணை எட்டிப்பார்த்தது. மண்வீதிகள் தார் வீதிகளாயின. தோட்டங்களும் வயல்களும் கடைகளாயும் குடியிருப்புகளாயும் மாறத்தொடங்கியிருக்கின்றன. நீர்நிலைகள் காணாமலாக்கப்பட்டன. துலாக்களும் வாளிகளும் மறைந்துபோயின. மின்சார நீர் இறைக்கும் இயந்திரங்கள் வீட்டுக்கு வீடு நிரந்தரமாய்க் குடிகொண்டன. வேலிகள் தொலைக்கப்பட்டன. மதில்கள் எட்டிப்பார்த்து நிலைக்கத் தொடங்கின. இரும்பு வாயில் கதவுகள் நிரந்தரமாகி விட படலைகள் ஒழிந்துகொண்டிருக்கின்றன. வீட்டு வாயிலுக்குள் செல்லும்போது காலிலோ வாகனச் சில்லிலோ புழுதியும் சேறும் ஒட்டியிருப்பது சகிக்க முடியாததாகியது. நிலங்கள் கற்களாலும் சிமெந்தினாலும் மூடப்பட்டு வர, மழை நீரோ செல்லும் வழியறியாது தவிக்கும் அதேவேளை, நிலத்தடி நீரூற்றோ நீருக்காகக் காத்திருக்கிறது. காலங்காலமாக எம்மைக் காத்த நீர்வட்டம் இன்று மெதுமெதுவாகக் குழம்பத்தொடங்கியிருக்கிறது.

## எங்களுடன் கரம் கோருங்கள்!

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் இயங்கும் வடமாகாணத்தின் நீர்வளப் பாதுகாப்புத் தொடர்பான பங்கேற்றல் செயலாய்வுக் குழுமத்தினதும் வடமாகாண இளம் நீர் வாண்மையாளர்களினதும் இணை முயற்சியாக, **'துளி'** எனும் இப்பக்கம் மாதம் ஒருமுறை பிரசுரிக்கப்படவிருக்கிறது. எமக்கே உரித்தான இந்த அரிய நீர்வளத்தைப் பேணுவதற்காக இம்மண்ணின் இளையோராகிய நாம் உங்கள் ஒவ்வொருவருக்கும் விடுக்கும் அறைகூவல் இது. மாதாந்தம் மூன்றாவது ஞாயிற்றுக்கிழமையின்போது உதயனூடாக இத்துளி உங்களை நாடி வரும். அத்துளிகளைப் பெருவெள்ளமாக்குவதோ அவற்றை வீணே கடலுடன் கலக்கச் செய்வதோ... தெரிவு உங்கள் கையில்!

வடமாகாணத்தின் நீர்வளம் சார்ந்து உங்களுக்கு ஏதேனும் சந்தேகங்கள் இருந்தால், எங்களுக்கு எழுதி அனுப்புங்கள். தகுந்த புலமையாளரைக் கொண்டு உங்கள் சந்தேகங்களை நாங்கள் தீர்த்து வைப்போம். சந்தேகங்களை அனுப்பவேண்டிய முகவரி:

**தபால் முகவரி**
WASPAR project, Centre for Digital Epidemiology,
Faculty of Medicine, University of Jaffna,
Adiyapatham Road, Kokuvil, Jaffna

**மின்னஞ்சல் முகவரி**
water@univ.jfn.ac.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹரிகரன் இசை நிகழ்ச்சியில் கண்டெடுக்கப்பட்ட சங்கிலி!


யாழ்ப்பாணம், மார்ச் 22

முற்றவெளி மைதானத்தில், அண்மையில் இடம் பெற்ற ஹரிஹரனின் இசை நிகழ்ச்சியில் ஏற்பட்ட குழப்ப நிலையின் போது, நிலத்தில் விழுந்து கிடந்த சங்கிலி ஒன்று, யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர் .

இசை நிகழ்ச்சியின்போது தங்கச்சங்கிலியைத் தொலைத்தவர்கள், யாழ்ப்பாணம் பொலிஸாரைத் தொடர்புகொண்டு, அடையாளத்தைக்காண்பித்து நீதிமன்றம் ஊடாகப் பெற்றுக்கொள்ளமுடியும் என யாழ்ப்பாணம் பொலிஸார் அறிவித்துள்ளனர். (ப-23)

# வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் 3000 ஆம் ஆண்டுகள் பழமையானது!

### நாடாளுமன்றில் சிறீதரன் எடுத்துரைப்பு



**கொழும்பு, மார்ச் 22**

**வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் 3000 ஆம் ஆண்டு பழமையான வரலாற்றைக் கொண்டது. அந்தப்பகுதியைச் சூழ தமிழர்களான நாகர்களே வாழ்ந்துள்ளனர் என்று வரலாற்று ஆய்வுகள் சொல்கின்றன - இவ்வாறு நாடாளுமன்றில் தெரிவித்தார் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன்.**

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவுக்கு எதிராக எதிர்க்கட்சியால் கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை உரையாற்றும்போதே அவர் இவ்வாறு வலியுறுத்தினார்.

"பழமையும் பாரம்பரியமும் கொண்ட வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தின் அடிவாரத்தில் தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுகள் மற்றும் வட்டெ முத்துகளைக் காணமுடியும். வெடுக்குநாறிமலையின் உச்சியில் ஆதிலிங்கேஸ்வரம் என்ற சிவன் ஆலயம் அமைந்துள்ளது. ஐந்து தலைமுறைகள் கடந்து அங்குவாழும் மக்கள் இந்த ஆலயத்தில் வழிபாட்டில் ஈடுபட்டு வருகின்றனர். 1988 ஆம் ஆண்டு அந்தப்பகுதி இந்திய இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்தபோது, அவர்களது பாதுகாப்புடன் அங்கு மகாசிவராத்திரி இடம்பெற்றிருந்தது. 1990களின் பின்னர் விடுதலைப் புலிகளின் ஆதரவுடன் அங்கு மகாசிவராத்திரி இடம்பெற்று வந்தது. 2009 ஆம் ஆண்டு யுத்தம் நிறைவடைந்த பின்னரும் அங்கு குடியேறிய மக்கள் 2010 ஆம் ஆண்டுமுதல் ஆதிலிங்கேஸ்வரரை வழிபட்டு வந்துள்ளனர். ஆனால் இப்போது தொல்பொருள் திணைக்களத்தின் ஆதரவுடன் இந்த ஆலயத்தை கைப்பற்ற பௌத்தத் துறவிகள் செயற்பட்டு வருகின்றனர். 2018ஆம் ஆண்டு முதல் இங்கு தமிழர்களின் வழிபாட்டு உரிமையைப் பறித்து வருகின்றனர். அதன் பின்னர் இங்கு வழிபடும் உரிமையைப் பறிக்கும் வழக்கு 2019 இல் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்டது. இதன்மூலம் ஆலயப் பூசகர் உட்படப் பலர் கைதுசெய்யப்பட்டு விடுதலை செய்யப் பட்டனர்.

தொல்பொருள் திணைக்களத்தாலும் 2019 ஆம் ஆண்டு வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ள நிலையில், ஆலயத்தின் அனைத்து விக்கிரகங்களும் அடியோடு அகற்றப்பட்டமை 2023 ஆம் ஆண்டு கண்டறியப்பட்டது. புதரொன்றில் எறியப்பட்டிருந்த சிவலிங்கத்தை மீண்டும் அங்கு பிரதிஷ்டை செய்து பிரதேச மக்கள் வழிபட்டு வருகின்றனர். இந்த நிலையில் இந்த ஆண்டு மகாசிவராத்திரியை சிறப்பாகச் செய்ய முற்பட்ட போது பூசகர் உட்பட 8 பேர் கைதுசெய்யப்பட்டனர். வழிபாடுகளைத் தடுக்க 500 க்கும் மேற்பட்ட கலகமடக்கும் பொலிஸார் இங்கு நிறுத்தப்பட்டு மக்களை அடக்க முற்பட்டனர். பக்தர்கள் மீது மிலேச்சத்தனமான தாக்குதலையும் நடத்தினர். பொலிஸார் இங்கு மனிதாபிமானமற்ற விதத்திலேயே நடந்துகொண்டனர். இந்தச் சம்பவத்தை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். இது 3000 ஆம் ஆண்டு பழமை வாய்ந்த தமிழர்களின் ஆலயமாகும்.

இந்த நாட்டில் வாழ்வதற்கான உரிமை இல்லையென்றால் எவ்வாறு நல்லிணக்கம் பற்றிச் சிந்திக்க முடியும்? நல்லிணக்கம் என்பது பேச்சளவில் இருப்பது அல்ல. ஒருநாட்டின் மக்களை அனுசரிப்பதில்தான் அது தங்கியுள்ளது. ஆகவே, வெடுக்குநாறிமலையில் உள்ள மக்கள் ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் வழிபட எந்தவொரு தடையும் இருக்கக் கூடாது.

ஜனாதிபதி மற்றும் தொல்பொருள் திணைக்களம் இதற்குரிய நடவடிக்கையெடுக்கவேண்டும்" என்றும் அவர் தெரிவித்தார். (அ).

## மக்களிடத்தில் '107' இலக்கத்தை பரவலாக்கம் செய்யும் பொலிஸார்

மன்னார், மார்ச் 22



தமிழ் மொழிமூலமான பொலிஸ் அவசர தொலைபேசி இலக்கமான 107 இன் சேவையை பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் அறிமுகப்படுத்திய நிலையில் மன்னார் நகரப்பகுதியிலுள்ள வாகனங்களில் அவசர தொலைபேசி இலக்கம் பொறிக்கப்பட்ட ஸ்ரிக்கர்கள் நேற்று புதன்கிழமை ஒட்டப்பட்டுள்ளன. (ஒ-56)

## முல்லைத்தீவில் வீடுகளைப் பெற்று பயன்படுத்தாத 118 குடும்பங்கள்

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த ஆண்டுகளில் பல்வேறு வீட்டுத் திட்டங்கள் ஊடாக வீடுகளைப் பெற்ற 118 பேர் அந்த வீடுகளில் குடியிருக்கவில்லை என்று முல்லைத்தீவு மாவட்டச் செயலர் அ.உமாமகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மக்கள் மீளக்குடியமரும்போது வீட்டுத் திட்டங்கள் ஊடாக வீடுகள் நிர்மாணித்துக்கொடுக்கப்பட்டன. அவை மட்டுமல்லாமல் அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட வீடுகளில்கூட அவர்கள் குடியிருக்கவில்லை.

இந்த வீடுகளில் சமூகச் சீர்கேடுகள் நடைபெறுகின்றன என்று பொது அமைப்புகளால் குற்றம் சுமத்தப்படுகின்றது. இந்த வீடுகளை வீடுகள் இல்லாதவர்களுக்கு வழங்குமாறு பல தடவைகள் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் சுட்டிக்காட்டப்பட்டபோதும் நடவடிக்கைகள் இதுவரை எடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-13)

## வைத்தீஸ்வரர் ஆலய இரதோற்சவம் நாளை

யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த் திருவிழா நாளை இடம்பெறவுள்ளது. ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 6ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. 19 தினங்கள் நடைபெறும் உற்சவத்தில் நாளை 23ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் 24 ஆம் திகதி தீர்தோற்சவமும் இடம்பெறவுள்ளன என்று ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது. (ச)



## மன். கிராமங்களின் பிரச்சினைகளை நேரில் ஆராய்ந்த மாவட்டச் செயலர்!

மன்னார், மார்ச் 22

மன்னார் மாந்தை மேற்குப் பிரதேச செயலாளர் பிரிவில் மிகவும் பின்தங்கிய கிராமங்களான கூராய், சீதுவிநாயகர்புரம் கிராமங்களுக்கு மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன் தலைமையிலான குழுவினர் நேரடியாகச் சென்று கிராமமக்களின் தேவைகளைக் கேட்டறிந்தனர். இந்தக் களப்பயணம் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

கிராமமக்கள், தமது குடிதண்ணீர்ப் பிரச்சினைகள், வீதிகள் சீரின்மை, வாழ்வாதாரப் பிரச்சினைகள் மற்றும் குறைபாடுகள் ஆகியவை தொடர்பில் மாவட்டச் செயலரிடம் எடுத்துக்கூறினர்.

மாவட்டச் செயலாளர் பொதுமக்கள் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு பெற்றுத் தரப்படும் என்று தெரிவித்தார். (ச-213)



## சட்டவிரோத மணலுடன் சிக்கிய 5 டிப்பர்கள்

கிளிநொச்சி, மார்ச் 22

சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் 5 டிப்பர்களுடன் சந்தேக நபர்கள் தருமபுரம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லாறு, தருமபுரம் மற்றும் புளியம்பொக்கணை ஆகிய பகுதிகளில் கடந்த திங்கட்கிழமை மேற்கொள்ளப்பட்ட 24 மணி நேர சுற்றிவளைப்பின் போதே அவர்கள் கைதுசெய்யப்பட்டனர். (ப-113)

## சாவகச்சேரி நகரப்பகுதியில் டெங்கு ஒழிப்புச் சோதனைகள்

சாவகச்சேரி, மார்ச் 22

டெங்கு நுளம்பு உற்பத்தியாவதற்குரிய ஏதுநிலைகளைக் கொண்டிருந்த குடியிருப்பாளர்கள் மற்றும் வர்த்தக நிலைய உரிமையாளர்கள் மூவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் குழு, சாவகச்சேரி நகரப் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை திடீர்ப் பரிசோதனைகளை மேற்கொண்டனர். மூன்று இடங்களில் டெங்கு குடம்பிகள் காணப்பட்டதையடுத்து உரிமையாளர்கள் மூவருக்கு 15 தினங்கள் அவகாசம் வழங்கப்பட்டதுடன், அந்தக் கால அவகாசத்துக்குள் துப்புரவு செய்யப்படாவிட்டால் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்றும், நகரப் பிரிவு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் குணசாந்தன் தெரிவித்தார். (ப-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு
12 . 05 . 1933



இறப்பு
21 . 03 . 2024

## திருமதி சதாசிவம் சரஸ்வதி

(ஓய்வுபெற்ற முன்னாள் பிரதி அதிபர்-பூநகரி மத்திய கல்லூரி, நல்லூர்)

பூநகரி நல்லூரை பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்ட அமரர் சதாசிவம் சரஸ்வதி அவர்கள் நேற்று (21.03.2024) அன்று காலமானார்.

அன்னார் அமரர்களான செல்லத்துரை - வள்ளியம்மை ஆகியோரின் ஏக புத்திரியும், அமரர் தம்பிப்பிள்ளை சதாசிவம் அவர்களின் பாசமிகு மனைவியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் (22.03.2024) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் பூநகரி நல்லூரிலுள்ள அவரது இல்லத்தில் இறுதிக்கிரியைகள் இடம்பெற்று பி.ப 1.00 மணிக்கு தகனக் கிரியைகளுக்காக 5 அடிவான் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்**

லதா பிரபாகரன் - 0094 779915147
பரமேஸ்வரன் -0094 778094437
சுரேஸ்குமார் - 0094 772397050

(CR 41954) V-1

# பொதுக்கூட்டம்

வலி. தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட, பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் 16 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் வலி. தென்மேற்குப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு இடம்பெறவுள்ளது. தலைவர் நி.இராஜதுரை தலைமையில் நடைபெறவுள்ள கூட்டத்தில் பிரதம விருந்தினராக வலி. தென்மேற்கு பிரதேச செயலாளர் திருமதி சுபாஜினி மதியழகன், சிறப்பு விருந்தினர்களாக உதவிப்பிரதேச செயலாளர் திருமதி செல்வகுமாரி நேசரட்ணம், வலி. தென்மேற்குப் பிரதேச செயலக கணக்காளர் அ.அருந்தவநேசன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ப)

# மரண அறிவித்தல்

## கணேசலிங்கம் லோகேஸ்வரி



சரவணை கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கணேசலிங்கம் லோகேஸ்வரி அவர்கள் நேற்று (21.03.2024) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிஐயா - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சின்னத்துரை - நாகம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்றவர்களான பரநிருபசிங்கம், தர்மகுலசிங்கம் மற்றும் சோதிஅம்பாள், தங்கேஸ்வரி, பஞ்சரெத்தினம் (சுவிஸ்), லோகநாதன் (சுவிஸ்) ஆகியோரின் நேசமிகு சகோதரியும், சுபாஜினி, கஸ்தூரி (ஆசிரியர்), அனுசா (அபிவிருத்தி உத்தியோகத்தர், வத்தளை) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற ரகு மற்றும் செல்வகுமார் (ஆசிரிய ஆலோசகர், தீவகக் கல்வி வலயம்), மனோச் சேபஸ் (வெளிநாட்டு விசாக்களுக்கான ஆலோசகர்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சண்முகநாதன், அருளழகன், கலாரஜனி, மகாலிங்கம், சண்முகலிங்கம், சபாலிங்கம், இராஜராஜேஸ்வரி, காலஞ்சென்ற சித்திரவேல் ஆகியோரின் நேசமிகு மைத்துனியும், தக்ஷவியின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.03.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சரவணை புன்னங்கண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 28319) S-1

# விலைக் கேள்விக்கான கோரல்
## சபை நிதி
## வலி வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை (கொல்லன்கலட்டி)

1. வலி வடக்கு பிரதேச சபை சார்பாக உள்ளூர் அதிகார சபை பெறுகைக் குழுவின் தலைவர் கீழ் வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைக்கான தகவுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக் கேள்வியாளர்களிடமிருந்து மூடப்பட்ட கடித உறையில் விலைக் கேள்விகளைக் கோருகின்றார்கள்.
2. விலைக் கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வி நடைமுறையின் மூலம் நடாத்தப்படும்.
3. விலைக் கேள்வியாளர்கள், நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவு பெற்ற கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினை பதிவு செய்யப் பட்டிருப்பதுடன் கறுப்புப் பட்டியலில் பெயர் இடம் பெறாதவராயிருத்தலும் வேண்டும்.
4. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக் கேள்வி ஆவணத்தில் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மற்றும் மேலதிக தகவல்கள் விலைக் கேள்வி ஆவணத்தில் Schedule (பகுதி 5) இல் உள்ளடக்கப்பட்டுள்ளன. (SBD -03)
5. அக்கறை கொண்டுள்ள விலைக் கேள்வியாளர்கள் கீழே 6ல் குறிப்பிடப்பட்ட முகவரியில் மேலதிக தகவலைப் பெறலாம் என்பதுடன் அம் முகவரியில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணிவரை அலுவலக நாட்களில் விலைக்கேள்வி ஆவணங்களைப் பரிசீலனை செய்யலாம்.
6. அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர் ஆங்கில மொழியிலான விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை செயலாளர், வலி வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை - கொல்லன்கலட்டி. (தொலைபேசி இல: 021-2241130, தொலை நகல் 021-2243688) எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை 2024.03.22 – 2024.04.05 காலப்பகுதியில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 2.00 மணி வரையில் சமர்ப்பித்து ரூ.3000.00 மீளளிக்கப்படாத தொகையினை பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
7. விலைக்கேள்விகள் (மூலம், பிரதி) 2024.04.05ம் திகதி 14.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் தலைவர், உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழு, வலி வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை (கொல்லன்கலட்டி) எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும். காலந் தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலைக்கான கேள்வி அடையாள இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். விலைக்கேள்விகள், அவைகளை மூடியவுடன் மேலேயுள்ள முகவரியில் சமுகமளித்திருக்கும் விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது முன்னிலையில் திறக்கப்படும்.
8. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| இல | கேள்வி அடையாள இல | வேலைவிபரம் | மதிப்பீட்டுத் தொகை(ரு.மில் | ஒப்பந்த காலம் | தேவையான தரம் | கேள்வி சமர்ப்பிக்கப்படும் திகதியிலிருந்து கேள்வி செல்லுபடியாகும் | | கேள்விப் பிணைவிபரம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | காலம் | திகதி | தொகை (ரு) | தேவைப்படும் காலம் |
| 01 | NP/14/41(14)/05/02/ 300/CF-10/2024 | வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட பொது வீதிகளின் இருகரைகளிலும் 8 அடி அகலத்திற்கு உட்பட்ட பிரதேசங்கள், பொது வடிகால்கள், மதகுகள்,பாலங்கள் மற்றும் பொதுமயானங்களில் காணப்படும் புற்கள், பற்றைகள், என்பவற்றினை செருக்குதல், வேர் பிடுங்குதல், மற்றும் தேவையற்ற பொருட்களை அப்புறப்படுத்துதல் என்பவற்றினை மேற்கொண்டு தளப்பிரதேசத்தினை பொதுப்பயன்பாட்டிற்கு ஏற்ற வகையில் சுத்தப்படுத்தி சபையிடம் கையளித்தல் | 1.391 | 60 நாட்கள் | C9 & C8 கட்டடம், வீதி, நீர்ப்பாசனம் | 49 நாட்கள் | 23.05.2024 | 14,000.00 | Till 20.06.2024 |

"விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும். இக் கொள்வனவின் மூலம் நடாத்தப்படும் வேலைக்கான மதிப்பீட்டுத்தொகை (VATமற்றும் வேறுவரிகள்) 50மில்லியனினுள் இருப்பின்.பிராந்திய முன்னுரிமைமற்றும் CIDA தர முன்னுரிமை என்பன பொதுநிதிச் சுற்றறிக்கை இல 04/2016(iii) இல் குறிப்பிடப்பட்டவாறு பின்பற்றப்படும்.


**தலைவர்,**
**உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழு**
**வலி வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை (கொல்லன்கலட்டி)**

(cr.41856) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடமராட்சி கிழக்கு, குடத்தனை வடக்குக் கடற்கரைப் பகுதியில் பிளாஸ்ரிக் கழிவுகளை அகற்றும் நடவடிக்கை கடந்த புதன்கிழமை முன்னெடுக்கப்பட்டுள்ளது. அந்தப்பகுதி கிராம சேவகர் தலைமையில் பொது மக்கள் இணைந்து இந்தச் செயற்பாட்டில் ஈடுபட்டனர். (ப-100)




பொன்னாவெளி வேரவில் கிராமத்தில் நூலகம் மற்றும் கணினி கற்கைக் கூடம் என்பன நேற்றுமுன்தினம் புதன்கிழமை திறக்கப்பட்டன. பூநகரிப் பிரதேசசபை செயலாளர் இ.தயாபரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் நூலகத்தை பொன்னாவெளி அனைத்து மக்கள் ஒன்றியத் தலைவர் ம.ஸ்ரீபாஸ்கரனும், கணினி கற்கைக் கூடத்தை வேரவில் மருத்துவ அதிகாரி இப்ரானும் திறந்து வைத்தனர். (எ-13)




மன்னார் பிரதேச சர்வ சமயக் குழுவும், தொடர்பாடல் மையமும் இணைந்து நடத்திய மகளிர்தின நிகழ்வு மன்னார் ஆகாஷ் விடுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம அதிதியாக மன்னார் மாவட்ட முன்னாள் செயலர் திருமதி ஸ்ரான்லி டி மெல்லும், சிறப்பு விருந்தினராக மன்னார் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி ரி.திவாகிரியும் கலந்துகொண்டனர். வளவாளர்களாக சட்டத்தரணிகளான திருமதி புராதினி சிவலிங்கம், திருமதி ஜூனைட் நூவிலா ஆகியோர் பங்கேற்றனர். (எ-60)

வாய்ச்சுகாதார தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையின் பற் சிகிச்சைப் பிரிவின் ஏற்பாட்டில், வாய்ச்சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வு மருத்துவமனையில் நேற்றுமுந்தினம் புதன்கிழமை முன்னெடுக்கப்பட்டது. (எ-316)






பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவிலுள்ள கிராம மற்றும் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் பிரதிநிதிகளுக்கான எதிர்காலச் செயற்பாடுகள் தொடர்பான விசேட கலந்துரையாடல், பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது. பிரதேச செயலர் த. ஜெயசீலன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நிர்வாக உத்தியோகத்தர்கள், மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம மற்றும் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். (எ-9)



டெங்குக் கட்டுப்பாடு தொடர்பான கலந்துரையாடல், கந்தர்மடம் வடகிழக்கு ஜே/103 கிராம சேவையாளர் பிரிவில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. (ப-66)





இலங்கைப் பொலிஸ் படையின் 160 ஆவது பொலிஸ் வீரர்கள் தின நிகழ்வு வவுனியா பொலிஸ் நிலைய வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள பொலிஸ் வீரர்கள் நினைவுத்தூபிக்கு அருகில் கடந்த சனிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது. வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் சாமந்த விஜயசேகர தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சர்வமதத் தலைவர்கள், வவுனியா பொலிஸ் அத்தியட்சகர்கள், பொலிஸ் பொறுப்பதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (எ-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிபருக்கு எதிராக விசாரணை

யாழ்ப்பாணம், மார்ச் 22

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல ஆண்கள் பாடசாலை அதிபருக்கு எதிராக யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிமனையால் விசாரணை முன்னெடுக்கப்படவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் இடம்பெற்ற கிரிக்கெட் ஆட்டம் ஒன்றில் மேற்படி பாடசாலையின் மாணவர்கள் சிலர், வேறு பாடசாலைகளுக்கு முன்பாக பாண்ட் இசைத்து கோசம் எழுப்பியிருந்தனர். இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்ட மாணவர்கள் அடையாளம் காணப்பட்டு, அந்த மாணவர்களும் அவர்களின் பெற்றோர்களும் ஏனைய பாடசாலைகளில் சிரமதானம் செய்யுமாறு பணிக்கப்பட்டிருந்தனர்.

இது தொடர்பில் வடக்கு மாகாண கல்விப் பணிமனைக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அதற்கு அமைவாக யாழ். வலயக் கல்விப் பணிமனையால் விசாரணை முன்னெடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-125)



முன்னாள் அமைச்சர் ரவிகருணாநாயக்க யாழ்ப்பாணத்துக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்ட நிலையில், தனது பயணத்தின் ஒருபகுதியாக யாழ்ப்பாணம் ஆயர் இல்லத்தில் யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயர் கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையை அவர் சந்தித்துக் கலந்துரையாடினார். (ம)



வெடுக்குநாறிமலையில்

# பௌத்தசின்னங்கள்மீதே சிவலிங்கம் பிரதிஷ்டையாம்

வீரசேகர கண்டுபிடிப்பு

கொழும்பு, மார்ச் 22

வெடுக்குநாறிமலையில், ஆயிரத்து 500 வருடங்கள் பழமையான பௌத்த சின்னங்களை இல்லாது செய்துவிட்டு, சிவலிங்கம் வைத்துள்ளனர். புதிதாகவே இந்தக் கட்டுமானங்களை மேற்கொண்டுள்ளனர் என்று பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினரான சரத் வீரசேகர நேற்றுத் தெரிவித்துள்ளார்.

வெடுக்குநாறிமலை விவகாரம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று வீரசேகர மேலும் தெரிவித்ததாவது:-

"வட்டுக்கானகலயில் (வெடுக்குநாறிமலையில்) சட்டவிரோதமாகச் செயற்பட்டவர்களுக்காக கூட்டமைப்பு எம்.பி.க்கள் பதாகைகளை தூக்கிக்கொண்டு குழப்பத்தில் ஈடுபட்டனர். அவ்வேளையில் நான் சபையில் இருக்கவில்லை. மத சுதந்திரம் இருக்கவேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் கூறுகின்றார். உண்மை என்னவென தெரியாமல் பேசவேண்டாம் என அவரிடம் கேட்டுக்கொள்கின்றேன்.

பௌத்த சின்னத்தை அழித்துவிட்டு அதன்மேல் சிவலிங்கத்தை வைத்து பூஜை செய்வதா மத சுதந்திரம்? என எதிர்க்கட்சித் தலைவரிடம் கேட்கின்றேன். அப்படியானால் வெள்ளவத்தையில் உள்ள இந்துக் கோவிலொன்றை இடித்துத்தள்ளிவிட்டு அங்கு புத்தர் சிலையை வைத்து பூஜை நடத்துவதும் மத சுதந்திரமா? எனவே, விடயம் தெரியாவிட்டால் பேசவேண்டாம்.

நான்வெடுக்குநாறிமலைசென்றுள்ளேன். 1500 வருடங்கள் பழமையான பௌத்த சின்னங்களை இல்லாது செய்துவிட்டு, சிவலிங்கம் வைத்துள்ளனர். சீமெந்து கூட காய்ந்து இருக்கவில்லை. அதாவது புதிதாகவே அதனை செய்துள்ளனர். இது தொடர்பில் கூட்டமைப்பினரே மக்களை குழப்புகின்றனர். அந்தப்பகுதியில் உள்ள மக்கள் இது தொடர்பில் கவலை தெரிவித்துள்ளனர். பௌத்தர்களின் பொறுமையை கையாலாகாத்தனமாக கருதவேண்டாம்" - என்றார். (அ-ம-44)

# தாவடியில் அடிதடி: ஆறுபேர் கைது!

தாவடிப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வன்முறை தொடர்பில் ஆறு சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று சுன்னாகம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வீடொன்றுக்கு முன்னால் நின்று இளைஞர்கள் சிலர் தகராறில் ஈடுபட்டுக்கொண்டிருந்துள்ளனர். இதையடுத்து அந்த வீட்டின் உரிமையாளர், தனது வீட்டுக்கு முன்பாக நின்று தகராறில் ஈடுபடவேண்டாம் என்று தெரிவித்ததையடுத்து அந்த இளைஞர்கள் வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்து அடாவடியில் ஈடுபட்டுள்ளனர். இதையடுத்து மேற்கொள்ளப்பட்ட பொலிஸ் முறைப்பாட்டுக்கு அமையவே தாவடிப் பகுதியைச் சேர்ந்த ஆறு இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களை மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-23)

## வெடுக்குநாறிமலை...

விடுவிக்கப்பட்டனர். விளக்கமறியல் காலத்தின்போது, தங்கள் அனைவரையும் விடுவிக்கவேண்டும் என்று வலியுறுத்தி எட்டுப்பேரில் சிலர் ஐந்து நாள்களாக உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களில் வெடுக்குநாறிமலையின் பிரதான பூசகரான தம்பிராசா மதிமுகராசாவும் ஒருவர். இந்த நிலையிலேயே தற்போது அவர் சுகவீனம் காரணமாக மாஞ்சோலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (அ-ம-110)

## வெடுக்குநாறிமலையில்...

வெடுக்குநாறிமலையில் எந்தக் கோயில்களும் இல்லை என்பதைத் தெளிவாகக் குறிப்பிடுகிறேன். இந்தமலை தொல்பொருள் திணைக்களம் அநுராதபுர யுகத்துக்குச் சொந்தமான தொல்பொருள் மரபுரிமைகள் உள்ள பகுதியாக அடையாளப்படுத்தியுள்ளது.

பௌத்த மத மரபுரிமைகள் உள்ள பகுதியில் பிறிதொரு தரப்பினர் தமது மத வழிபாடுகளை முன்னெடுக்கும்போது முரண்பாடுகளே தோற்றம்பெறும். 2023 ஆம் ஆண்டு இந்த மலையில் சட்டவிரோதமான முறையில் சிவலிங்கத்தை பிரதிஷ்டை செய்ததும் பிரச்சினைகள் தோற்றம் பெற்றன. மார்ச் 4ஆம் திகதி மதிமுகராசா என்ற பூசகர் வெடுக்குநாறி மலையில் பூஜை வழிபாட்டில் ஈடுபட வவுனியா நீதிவான் நீதிமன்றில் அனுமதி கோரியுள்ளார்.

இந்தக் கோரிக்கையை நீதிமன்றம் மறுத்துள்ள நிலையில் மார்ச் 8ஆம் திகதி சிவராத்திரி தினத்தன்று 400 பேர் வரை இந்த மலைக்குச் சென்றுள்ளார்கள். மாலை 6 மணிவரை மலையில் இருக்கமுடியும். 6 மணிக்குப் பின்னர் அங்கு எவரும் இருக்கமுடியாது என்று குறிப்பிட்டிருந்த நிலையில் சுமார் 40 பேர் இரவு 8 மணிவரை அங்கு இருந்துள்ளார்கள்.

வெடுக்குநாறிமலையில் இரவு 8 மணிவரை தங்கியிருந்தவர்கள் அடுப்புப் பற்றவைத்து சட்டவிரோதமானமுறையில் செயற்பட முற்படுகையில் தொல்பொருள் திணைக்களமும் வன உயிரிகள் திணைக்களமும் இந்தச் செயற்பாட்டைத் தடுத்து நிறுத்துமாறு பொலிஸாரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். இதன் பின்னரே 8 பேர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

பௌத்த மரபுரிமைகள் உள்ள இடங்களுக்குச் சென்று முறையற்ற வகையில் செயற்பட்டால் பிரச்சினைகளே தீவிரமடையும். வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இவ்வாறான செயற்பாடுகள் தொடர்ந்து இடம்பெறுகின்றன" - என்றார். (அ-ம-44)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாண மாவட்டச் செயலக மாவட்ட சமுர்த்தி பிரிவில் கணக்காளராக கடமையாற்றும் திரு. இரத்தினம் முருகதாஸ் அவர்களின் பாசமிகு மனைவி

**திருமதி முருகதாஸ் சுமங்கலா** அவர்கள்

கடந்த 18-03-2024 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று இறைபதம் அடைந்து விட்டார். அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் அவரது பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(CR/41953) J-1 நலன்புரி சங்கம், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 16 . 05 . 1934



மறைவு 21 . 03 . 2024

**திருமதி திலகவதி இராமலிங்கம்**

சாவகச்சேரி மட்டுவில் வடக்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திலகவதி இராமலிங்கம் அவர்கள் 21.03.2024 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைரமுத்து-உலகாத்தைப்பிள்ளை தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற கந்தையா-சின்னத்தங்கம் தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற இராமலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், கந்தசாமி, தேவகுஞ்சரம், தங்கராசா, நகுலேஸ்வரி, அமரர் இராஜேஸ்வரி, தியாகராசா, விக்கினேஸ்வரி, தனலட்சுமி, அமரர் மகாலட்சுமி, பத்மாவதி, பரமானந்தம் (லண்டன்), மனோகரன் (லண்டன்), அமரர் ஸ்ரீபாஸ்கரன், அமரர் ஸ்ரீரங்கன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், பாசமிகு மருமக்களின் மாமியும், பேரப்பிள்ளைகளின் பாசமிகு பேர்த்தியும், பூட்டப்பிள்ளைகளின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 22.03.2024 வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் காலை 11.00 மணியளவில் நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் மட்டுவில் வடக்கு ஊரிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

முத்துமாரி அம்மன் கோவில் வீதி
மட்டுவில் வடக்கு
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.
ராணி-மகள் : 075 939 5240
தனம்-மகள் : 077 050 2815

(CR 41958) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தப்பிப்பிழைத்தார்...

நிகழ்நிலைக் காப்புச் சட்டமூலம் தொடர்பில் உயர்நீதிமன்றத்தால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளில் சில பரிந்துரைகள் உள்வாங்கப்படாமல் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதனை ஆராயாமல் பொறுப்பற்ற விதத்தில் கையொப்பமிட்டு சட்டத்தை சான்றுரைப் படுத்திய தன்மூலம் சபாநாயகர் அரசமைப்பை மீறிவிட்டார் என்பது சபாநாயகருக்கு எதிரான முதல் குற்றச்சாட்டாகும். அத்துடன், பொலிஸ்மா அதிபர் நியமனம் தொடர்பிலும் சபாநாயகர் அரசமைப்பை அப்பட்டமாக மீறியுள்ளார் எனக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. இவற்றை அடிப்படையாக வைத்தே சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தி, இலங்கைத் தமிழரசுக்கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தேசிய மக்கள் சக்தி, டலஸ் அணி, விமல் அணி என்பன பிரேரணைக்கு ஆதரவாக (சபாநாயகருக்கு எதிராக) வாக்களித்தன. பொதுஜன பெரமுன, ஐக்கிய தேசியக் கட்சி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஈ.பி.டி.பி. உள்ளிட்ட அரச பங்காளிக்கட்சிகள் பிரேரணைக்கு எதிராக (சபாநாயகருக்கு ஆதரவாக) வாக்களித்தன. இதன்படி குறித்த பிரேரணைக்கு ஆதரவாக 75 வாக்குகளும், பிரேரணைக்கு எதிராக 117 வாக்குகளும் அளிக்கப்பட்டன. 42 மேலதிக வாக்குகளால் பிரேரணை நிராகரிக்கப்பட்டது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவுக்கு எதிராக 45 நாடாளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பத்துடன் கையளிக்கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம் மார்ச் 19 ஆம் திகதி ஆரம்பமானது. ஆரம்பத்தில் இரு நாள்களே விவாதத்துக்கு ஒதுக்கப்பட்டு, 20 ஆம் திகதி மாலை வாக்கெடுப்பு நடத்தப்படவிருந்தது. எனினும், 19 ஆம் திகதி நடத்தப்பட்ட கட்சி தலைவர்கள் கூட்டத்தில் மேலும் ஒருநாள் ஒதுக்கப்பட்டது. இதற்கமையவே நேற்றும் விவாதம் தொடர்ந்தது.

வாக்கெடுப்பின் பின்னர் சபாநாயகர் உரையாற்றினார். தம்மீது முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை அவர் நிராகரித்தார். (அ-ம-44)

## வவுனியா...

கடந்த 8ஆம் திகதி கைதுசெய்யப்பட்டனர். அவர்கள் வவுனியா சிறைச்சாலையில் விளக்கமறியல் கைதிகளாக அடைக்கப்பட்டனர். பின்னர் கடந்த 19ஆம் திகதி வவுனியா நீதிமன்றம் அவர்களுக்கு எதிரான வழக்கைத் தள்ளுபடி செய்ததுடன், வழக்கிலிருந்து அனைவரையும் விடுவித்தது. இந்த எட்டுப் பேரில் இருவரே வவுனியா சிறைக்குள் நிலவும் அடாவடித் தனங்கள் தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

வவுனியா சிறைச்சாலையை வதை முகாம் என்றே கூறமுடியும். எந்தவொரு அடிப்படை வளமும் அற்ற ஒரு சிறைச்சாலையாக அது காணப்படுகின்றது. 200 பேர் அளவிலான கைதிகளே அங்கு இருப்பதற்கான இடவசதி காணப்படுகின்றது. ஆனால் நாம் விடுதலையாகும் வரை 586 கைதிகள் அங்கு அடைக்கப்பட்டிருந்தனர். அத்துடன் அடிப்படை வியங்களே அங்கு இல்லாத நிலை காணப்படுகின்றது. குறிப்பாக நீர்வசதி மிகவும் பற்றாக்குறையாக உள்ளது. அத்தனை பேருக்குமாகச் சேர்த்து சிறிய நீர்த்தொட்டி ஒன்றே அங்கு அமைக்கப்பட்டுள்ளது. அது தொடர்ந்தும் இயங்குவதில்லை. ஆறுவாளி தண்ணீரே ஒருநாளில் ஒருவருக்கு வழங்கப்படுகின்றது. அதற்காக இரண்டரை மணித்தியாலங்கள் காத்திருக்கவேண்டும். இதேவேளை - தற்போதைய வெப்பமான காலநிலையால் கணிசமானவர்கள் சொறி, சிரங்கு போன்ற நோய்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். உயிர் ஆபத்துகள் நிகழக்கூடிய வாய்ப்புகள்கூட அங்கே காணப்படுகின்றன.

பல கைதிகள் மலசலகூடங்களிலும் குளியலறைகளிலும் உறங்கும் நிலை காணப்படுகின்றது. உணவின் தரம் மிகவும் மோசமானது. கிரந்தித் தன்மை கூடிய சூரைமீனே தினமும் தரப்படுகின்றது. இதனால் பலர் சிரங்கு நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இது அரசாங்கத்தின் திட்டமிட்ட செயற்பாடாகவே எண்ணத்தோன்றுகின்றது. அத்துடன் பெரிய குற்றங்கள் செய்தவர்கள், சந்தேகநபர்கள், சிறிய குற்றம் செய்தவர்கள் என்று வகைப்படுத்தப்படாமல் அனைவரும் ஒரே இடத்திலேயே அடைக்கப்பட்டுள்ளனர். இதனால் அங்கு செல்லும் பலர் பெரிய குற்றவாளிகளாக மாற்றப்படும் நிலையும் காணப்படுகின்றது. இதனால் குற்றவாளிகளும், குற்றங்களும் மேலும் அதிகரிக்கும் நிலையே ஏற்படும். இது அங்கு அடைக்கப்பட்டுள்ள கைதிகள் அனைவரதும் வேண்டுகோளாகக் காணப்படுகின்றது. எனவே இந்த நிலைமைமாற்றப்படவேண்டும் - என்றனர். (அ-ம-110)

## 4 நாள்களுக்கு...

ரணிலின் இன்றைய வருகைக்கான செலவுகளுக்குத் திணைக்களங்கள் திண்டாடுவதாகத் தெரியவருகின்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த ஜனவரி 4ஆம் திகதியிலிருந்து 7ஆம் திகதி வரை வடக்குக்குப் பயணம் மேற்கொண்டு பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்றார்.

அவரது இந்த வருகைக்காக சிறிலங்கா விமானப் படையின் உலங்குவானூர்தி பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கான செலவு விவரங்கள் விமானப் படையிடம் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாகக் கோரப்பட்டபோதும் அந்தத் தகவலை வெளிவிடுவது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் எனத் தெரிவித்து மறுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலகத்திடம் ஜனாதிபதியின் வடக்கு நிகழ்வுக்கான செலவு விவரம் தொடர்பில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாகக் கோரியபோதும், ஜனாதிபதி செயலகம் எந்தவொரு செலவையும் மேற்கொள்ளவில்லை எனப் பதிலளித்துள்ளது.

யாழ்ப்பாணமாவட்டச்செயலகம், வவுனியா மாவட்டச் செயலகம் என்பன ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களை ஒழுங்குபடுத்தியிருந்தன. அது தொடர்பான செலவு விவரங்கள் மாவட்டச் செயலகங்களில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாகக் கோரப்பட்டது.

வவுனியா மாவட்டச் செயலகம் 5 இலட்சத்து 35 ஆயிரத்து 160 ரூபா செலவிட்டுள்ளதாகவும், யாழ். மாவட்டச் செயலகம் 3 இலட்சத்து 89 ஆயிரத்து 23 ரூபா செலவிட் டுள்ளதாகவும் பதில் அளித்துள்ளன. இந்த நிதி ஜனாதிபதி செயலகத்திலிருந்து விடுவிக்கப்படும் என எதிர்பார்ப்பதாக யாழ். மாவட்டச் செயலகம் தெரிவித்துள்ளது. மேலும் நகரியில் இடம்பெற்ற நிகழ்வுக்காக நகரி பிரதேசசெயலகத்தால் 2 இலட்சத்து 625 ரூபா செலவிடப்பட்டுள்ளதாக பிரதேச செயலகம் தகவல் அறியும் உரிமைக் கோரிக்கைக்குப் பதிலளித்துள்ளது.

மேலும், ஐக்கிய தேசியக் கட்சியினரை யாழ். நகரிலுள்ள வலம்புரி ஹோட்டலில் ஜனாதிபதி சந்தித்தமைக்கான செலவு விவரங்களை யாழ். மாவட்டச்செயலகம் மற்றும் ஜனாதிபதி செயலகத்திடம் தகவல் அறியும் உரிமை கோரிக்கையூடாக முன்வைத்தபோதும் அவ்வாறானதொரு செலவும் மேற்கொள்ளப்படவில்லை என்று பதிலளித்துள்ளன.

இதேவேளை - ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்துக்கு இன்று மேற்கொள்ளவுள்ள பயணத்துக்கான செலவுகளை மேற்கொள்வது தொடர்பில் திணைக்களங்கள் திண்டாடுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ஓ-5)

## தவறான...

கணவனைப் பிரிந்துவாழும் அந்தப் பெண் தவறான உறவின் மூலம் குழந்தையைப் பிரசவித்துள்ளார். கடந்த 15 ஆம் திகதி வீடொன்றில் வைத்தே பெண்ணுக்கு பிரசவம் நிகழ்ந்துள்ளதாகத் தெரியவருகின்றது. சுகவீனம் காரணமாக அவர் கிளிநொச்சி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில், பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமையவே பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடம் மேற்கொண்ட விசாரணையில், பெண்ணுடன் தொடர்பை வைத்திருந்த போதகர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். குழந்தையைப் பொலித்தீன்பை ஒன்றுக்குள் சுற்றிச்சென்று புளியம்பொக்கணைப் பகுதியில்வைத்து எரிப்பதற்கு அந்தப் போதகரே முன்னின்று செயற்பட்டுள்ளமை பெண் வழங்கிய வாக்கு மூலத்தின் அடிப்படையில் தெரியவந்துள்ளது.

இதையடுத்து போதகரும் பெண்ணும் கைதுசெய்யப்பட்டு முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தில் கடந்த 19ஆம் திகதி முற்படுத்தப்பட்டதையடுத்து, அவர்கள் இருவரும் எதிர்வரும் 2ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். சான்றுப் பொருள்களைக் கைப்பற்றும் நடவடிக்கையிலும் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (அ-ம-19)

## அடையாள...

கட்டாயமாகும். எனவே எனக்கு உரிய அடையாள அட்டையை வழங்கும்படி கடந்த ஜனவரி மாதம் மறுவாழ்வு இயக்குநரிடம் விண்ணப்பித்தேன். ஆனால், அந்த விண்ணப்பத்தின் மீது இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எனவே அடையாள அட்டை வழங்க மறுவாழ்வு இயக்குநருக்கு உத்தரவிடவேண்டும்' என்று கோரியுள்ளார்.

இந்த வழக்கு நீதிபதிகள் எம்.எஸ்.ரமேஷ் மற்றும் சுந்தர் மோகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் நேற்று வியாழக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, வழக்கை வேறு அமர்வில் பட்டியலிடும் வகையில் தலைமை நீதிபதியின் ஒப்புதலைப் பெறுமாறு பதிவுத்துறைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. (அ-ம-100)

## போராட்டக்காரர்கள்...

யாழ்ப்பாணக் குடாநாட்டில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களைக் கண்டித்தும், இனிவரும் காலங்களில் இவ்வாறான அத்துமீறல் மீன்பிடி நடவடிக்கைகள் இடம்பெறக்கூடாது என்று வலியுறுத்தியும் நான்கு மீனவர்கள் யாழ்ப்பாணம் இந்தியத் துணைத்தூதரகத்துக்குச் செல்லும் வழியில் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். மூன்றாம் நாளாக அவர்களின் போராட்டம் நேற்றும் தொடர்ந்தது. இந்த நிலையில் நேற்று அவர்களைப் பரிசோதித்த மருத்துவர், அந்த மீனவர்களின் உடலில் நீர்ச்சத்துக் குறைவடைகின்றது என்று தெரிவித்தார். அவர்களில் ஒருவர் தீவிரமாகப் பாதிக்கப்பட்டிருப்பதையும் மருத்துவர் உறுதிப்படுத்தினார். (அ-ம-27-20)

## ஜனாதிபதி...

காகரணில் விடுவிக்கவுள்ளார். அத்துடன், வடக்கில் பல்வேறு பகுதிகளிலும் காணிகள் இல்லாமல் அரச காணிகளில் வசிக்கும் மக்களுக்கு அவர் காணிப்பத்திரங்களையும் வழங்கவுள்ளார். விவசாயிகளுக்காக உருவாக்கப்பட்டுள்ள மென்பொருள் அங்குராப்பண நிகழ்விலும், மந்திகை மருத்துவமனையில் அமைக்கப்பட்டுள்ள அவசர சிகிச்சைப் பிரிவு திறப்பு விழாவிலும் ஜனாதிபதி ரணில் கலந்துகொள்ளவுள்ளார். (அ-ம-125)

## வவுனியாவில்...

சைக்கிளில் சென்றவருமே படுகாயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இரு வாகனங்களும் கடுமையாகச் சேதமடைந்துள்ளதுடன், விபத்துத் தொடர்பில் வவுனியாப் போக்குவரத்துப்பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-ம-18)

சிவமயம்

தென்மராட்சி ஆலயங்களில் திருநெறி விளக்கப்பிரசங்கங்கள்.

ஆலய அறங்காவலர்கள், பரிபாலனசபையினர் வழிபடுவோர் சங்கத்தினர் கவனத்துக்கு

ஆத்ம விசாரத்தினை வலியுறுத்தும் நிகழ்வுகள்

சி.ஜெயகணேஷன்
(ஓய்வுநிலை ஆசிரியர்)

தொடர்புகளுக்கு
14/5A. பழைய பொலிஸ்நிலைய வீதி
நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி.

074 359 0569

(CS 41957) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருதடி விநாயகருக்கு இன்று கொடியேற்றம்!

தமிழ்வேந்தர் காலத்துத்திருத்தலங்களி லொன்றாகப் போற்றப்படும் வரலாற்றுச் சிறப்புமிக்க மானிப்பாய் மருதடி விநாய கர் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமா கின்றது.

உற்சவம் தொடர்ந்து 25 தினங்கள் இடம் பெறவுள்ளன. புதுவருடப்பிறப்பு தின மான எதிர்வரும் ஏப்ரல் மாதம் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரதோற்சவ மும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம் பெறவுள்ளன. இக்காலத்தில் புராண படனம் செய்தல், சமயப் பிரசங்கம் செய் தல், திருமுறைகள் ஓதுதல் ஓதுவார் களை அழைப்பித்து ஓதுவித்தல் முத லான சமய நிகழ்ச்சிகள் மக்களின் ஆன்மீக மேம்பாட்டிற்காக நடத்தப்பட வுள்ளன என்று ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (ச)

## உப அஞ்சல் அலுவலகத்தை இடம் மாற்றக் கோரிக்கை!

சாவகச்சேரி அஞ்சல் அலுவலகத்துக்குட் பட்ட தனங்களப்பு உப அஞ்சல் அலுவ லகத்தை குடியிருப்புகள் உள்ள பகுதி யில் இயக்க நடவடிக்கை எடுக்கவேண்டு மென அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த உப அஞ்சல் அலுவலகத்திலி ருந்து ஒரு கிலோ மீற்றர் தூரத்துக்கு அப்பால் 300க்கு மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன. பிரதேச செயலகத் தால் வழங்கப்படும் உதவித் தொகை களைப் பெறுவதற்காக சுமார் நூறுக்கு மேற்பட்ட முதியவர்கள் அஞ்சல் அலுவ லகத்துக்கு நடந்து செல்லவேண்டியுள் ளது. எனவே குடியிருப்புகள் உள்ள பகுதியில் உப அஞ்சல் அலுவலகத்தை இயக்கினால் மக்கள் நன்மையடைவார்கள் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (எ-9)


## கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம்

மணவாளக்கோல உற்சவம்-2024 இன்று (22.03.2024) வெள்ளிக்கிழமை காலை 07.00 மணிக்கு கிரியைகளுடன் ஆரம்பமாகி அம்பாளுக்கு 1008 சங்காபிஷேகமும் ஏனைய பரிவாரமூர்த்திகளுக்கு விசேட அபிஷேகமும் நடைபெற்று அம்பாள் வீதி உலாவருவார்.

அடியவர்கள் அனைவரும் கலந்துகொண்டு அம்பாளின் இஷ்ட சித்திகளை பெற்றுய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்

குறிப்பு: உற்சவ நிறைவில் அடியவர்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

ஆலய பரிபாலன சபை
கொக்குவில் நந்தாவில்
கற்புலத்து மனோன்மணி அம்பாள்
ஆலயம்.

(CS 26330) N-1

## காணி விற்பனைக்கு உண்டு

**நெல்லியடி நகரத்தில் 10 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு**

- நெல்லியடி நகரத்திலிருந்து 2 km தூரத்தில்
- விக்கினேஸ்வரா வித்தியாலயத்திலிருந்து 500m தூரத்தில்
- உச்சி அம்மன் கோயில் அருகாமையில்
- 16 அடிப்பாதையுடன் இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- பெற்றோல் செற் முன் வீதியில் 2 Km தூரத்தில் நெல்லியடி
- பொலிஸ் நிலைய அருகாமை வீதியில் 2 Km தூரம்
- குடியிருப்புகள் சூழ உள்ள காணி நன்னீர் ஊற்று நிலம்
- ஒரு பரப்பின் விலை ஐந்து இலட்சம் ரூபாய் மட்டும் (500 000/=)

பார்வையிடும் நேரம் காலை 8.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை

தொடர்பு: 071 173 3911 / 076 853 5022

## தவறிவிட்டது

யாழ். ஆஸ்பத்திரி வீதியில்
City Medical மற்றும் Commercial
வங்கிக்கு அருகாமையில்
ஒரு தொகை பணம் தவறிவிட்டது.
(கோயில் தேவைக்கான பணம்)
கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.
தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

077 652 3229

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் திருநெல்வேலி
அம்மாச்சி உணவகத்திற்கு முன்பாக
1 3/4 பரப்புக் காணி
விற்பனைக்கு உண்டு.
விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தரகர்கள் தொடர்பு கொள்ளவேண்டாம்.


தொடர்பு- 076 206 1703


## மரண அறிவித்தல்

✝

தோற்றம் 03 . 10 . 1942

மறைவு 21 . 03 . 2024



**நாகலிங்கம் ஜெகநாதன்**

(Retired Manager - Marketing Support Services - Ceylinco life)

முதலாம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்டிருந்த நாகலிங்கம் ஜெகநாதன் அவர்கள் நேற்று (21.03.2024) வியாழக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - கண்மணி தம்பதியரின் அருமை மகனும், காலஞ்சென்றவர்களான டேவிட் கனகநாயகம் தம்பதியரின் அன்பு மருமகனும், அமிர்தசெல்வி (செல்வி) அவர்களின் ஆருயிர்க் கணவரும், சோபனராஜ் (Tactory Manager - PAN AM FOOD (PVT) Ltd) அவர்களின் பாசமிகு தந்தையும், ஸ்ரீவதனி சோபனராஜ் (Deputy Principal - Manipay Ladies College) அவர்களின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, மயில்வாகனம் மற்றும் கமறைநாயகி, காலஞ்சென்ற இராஜேஸ்வரி ஆகியோரின் சகோதரனும், ஜெயராஜா, விமலராஜன், பிரேமசந்திரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (23.03.2024) சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, நல்லடக்கம் யாழ்ப்பாணம் கொட்டடி மெதடிஸ்த சேமக்காலையில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மனைவி Selvi - 077 109 4793
மகன் Soban - 077 973 9989

(CS 26721) S-1

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 05 . 08 . 1942

மறைவு 21 . 03 . 2024



**அரியமலர் காசிப்பிள்ளை**

புலோப்பளை பளையைச் சேர்ந்த அரியமலர் காசிப்பிள்ளை நேற்று (21.03.2024) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - இலக்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - வள்ளிப் பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காசிப்பிள்ளை (ஓய்வுபெற்ற கால்நடை உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும், நிரஞ்சன், நிர்ஜனன் ஆகியோரின் அன்புத் தாயாரும், சுநந்தா, சோபனா ஆகியோரின் அன்பு மாமியாரும், அபூர்வன், அம்சனா, பைரவி, பிரணகி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற தங்கமலர் மற்றும் சிவஞானசுந்தரம், கமலாதேவி, லோகஞானம், விமலாதேவி, குணேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.03.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பொற்பத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

புலோப்பளை,
பளை.

மகன் - 076 529 6407
சகோதரர் - 077 556 8768

(CS54309) N-1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.03.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.